Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆவணி 30 | 15-09-94 | வியாழக்கிழமை | ஓசை 219

## 2015-ல் உலக சனத்தொகையை 727 கோடியாக வைத்திருக்க முடிவு

சனத்தொகை வளர்ச்சியை கட்டுப்படுத்தாது போனால் எதிர்காலக் குழந்தைகள் அநாதைகளாகும் அச்சுறுத்தல் காணப்படுவதாக கெய்ரோவில் நடந்தசனத்தொகை கட்டுப்பாட்டு மகாநாட்டின்இறுதியில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கை தெரிவித்துள்ளது. இக் கூட்டறிக்கையில், 69 நாடுகளின் தலைவர்கள் கைச்சாத்திட்டுள்ளனர். துரித சனத்தொகை வளர்ச்சியினால் வருமான சமத்துவமின்மை, உலக சுகாதாரம் தரக்குறைவாதல் போன்ற பிரச்சினைகளும் உருவாகின்றன, இதன் காரணமாக (6ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை வானொலியில் தலைவரின் பேட்டி ஒலிபரப்பு

(கொழும்பு)

தலைவர் திரு வே பிரபாகரன் பி பி. ஸியின் தமிழோசைக்கு வழங்கிய பேட்டியை நேற்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மறு ஒலிபரப்புச் செய்தது.

பி. பி. ஸியின் தமிழோசை நிகழ்ச்சித் தயாரிப்பாளர் திருமதி ஆனந்தி சூரியப்பிரகாசம் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது தலைவர் பிரபாகரன் இப் பேட்டியை வழங்கியமையும், இது பி பி. ஸியின் பல்வேறு அலைவரிசைகளிலும் நேற்று முன்தினம் ஒலிபரப்ப இயமையும் தெரிந்ததே

# தலைவர் பிரபாகரனின் கடிதம் அரசால் தீவிரமாக பரிசீலிப்பு

## தியாகி திலீபன் நினைவு நாட்கள் இன்று எழுச்சியுடன் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஐந்தச் கோரிக்கையை முன்வைத்து நீராகாரம் எதுவுமின்றி சாகும்வரை உண்ணாவிரதமிருந்து உயிர்த் தியாகம் செய்த தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் ஏழாம் ஆண்டு நினைவு நாட்கள் இன்று உணர்வெழுச்சியுடன் ஆரம்பிக்கப்படுகின்றன.

எதிர்வரும் 26ஆம் திகதி வரை இந்த நினைவு நாட்கள் தமிழீழமெங்கும் அனுஷ்டிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தியாகி திலீபன் உண்ணா நோன்பிருந்து உயிர்த் தியாகம் செய்த இந்த பன்னிரெண்டு நட்களும் வீதிகள். பொது இடங்கள், வீடுகள் தோறும் அலங்கரிக்கப்பட்டு பந்தலிடப்பட்டு திலீபனின் உருவப்படம் வைக்கப்பட்டு மலர் வைத்து, விளக்கேற்றி நினைவு கூரப்படும்.

இந்த நாட்களில் உண்ணாவிரதங்களும், கலை நிகழ்ச்சிகளும் நடாத்தப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் சகல பகுதிகளிலும் பெரியளவில் திலீபனின் நினைவு நாட்கள் அனுஷ்டிக்கப்படுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (தி).

லெப்- கேணல் திலீபன் நினைவாக

## வட்ட ரீதியாக நடைபெறும் உண்ணாவிரத விபரம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ தாயகத்தின் விடுதலைக்காக இன்னுயிர் ஈந்த தியாகி லெப். கேணல் திலீபனின் 7-ம் ஆண்டு நினைவு நாட்கள் இன்று ஆரம்பமாகின்றன.

வட்ட ரீதியாக, யாழ் குடாநாடு எங்கும் உண்ணாவிரதங்கள், ஈகச்சுடரேற்றல் மலரஞ்சலி, நினைவுரைகள், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன.

இன்றைய நிகழ்வில் வலி...

...முகாம், மணற்புல முகாம், பாரதி சனசமூக நிலையம் ஆகியனவும், சங்கானை வட்டத்தில் வடக்கம்பரை அம் (6ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை மதிப்பீட்டு நிலையம் யாழ்' இல் அமைக்க முயற்சி

(நல்லூர்)

நாட்டின் நிலைமை சீராகும் பட்சத்தில் க.பொ.த. ...

நகரங்களில் மதிப்பீட்டு நிலையங்கள் நிறுவப்பட உள்ளன. ...

## அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆராய்வதாக அமைச்சர் தகவல்

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகவும், அடுத்த நடவடிக்கைகள் பற்றி ஆலோசித்து வருவதாகவும், தகவல் தொடர்புகள் அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.**

நேற்று, அமைச்சரவை தீர்மானங்களை செய்தியாளருக்கு அறிவிப்பதற்கான மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப்புலிகள் தலைவர் அனுப்பியுள்ள கடிதத்தின் சில விடயங்கள் பற்றி தாம் அறிந்துள்ள போதிலும் பிரதம மந்திரியும் பாதுகாப்பு பிரதியமைச்சரும் அவை பற்றி நடவடிக்கை எடுத்து வருவதால், மேலதிக விபரங்களை இங்கு குறிப்பிடவில்லை.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கும் இப் மகாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது தற்... தனால் இச் சந்திப்பை சற்று பின்தள்ளி வைக்க அவர் விரும்புகின்றார்.

நாம் பொது மக்களுக்கு எதையும் மறைக்க விரும்பவில்லை ஆனால் உபாயங்களை கையாள வேண்டிய சந்தர்ப்பங்களும் இருக்கின்றன எனவே சகல விபரங்களும் பின்னர் தொடர்புச் சாதனங்களுக்கு வழங்கப்படும் என அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

இதேவேளை புலிகள் நியமித்தபிரதிநிதிகள்தொடர்பான கடிதம் நேற்று புதன் பிரதமர் சந்திரிகா குமாரதுங்கவிடம் ஒப்படைக்கப்பட்டதாக வெளி... சினைக்கான சமாதானமுயற்சிகளுக்கு தொடர்ந்து சாதகமான பதிலே விடுதலைப்புலிகளிடமிருந்து கிடைத்துவருவதாக அரசாங்க அதிகார பூர்வமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக ஏ. எப். பி. செய்தி நிறுவனம் கருத்து வெளியிட்டுள்ளது.

அரசாங்கம் அனுப்பிவைத்த கடிதங்களுக்கு உடனடியான பதிலை விடுதலைப் புலிகள் அளித்து வருவதாகவும், இக் கடிதங்களில் பூரண திருப்தி அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளதாக அவ் வட்டாரங்கள் மூலம்சுட்டிகாட்டப்பட்டுள்ளதாக அச் செய்தி நிறுவனம்...

## வீரச்சாவு



மேஜர் தர்மேந்திரா

மன்னாரில் கடந்த 12ஆம் திகதி இடம்பெற்ற தவறுதலான வெடி விபத்தில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த மேஜர் தர்மேந்திரா (வேலு கணபதி, கள்ளிக்குளம், அடம்பன், மன்னார்) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

நிகழ்வுகள் என்பன இடம்பெற வுள்ளன.

இன்றைய நிகழ்வில் வலிகாமம் கோட்டத்தில், உடுவில் வட்டத்தில் சுன்னாகம் சிவன் கோவிலடியில் நடைபெறும் உண்ணாவிரத நிகழ்வில், சுன்னாகம் வர்த்தக சங்க ஊழியர்கள், துப்புத்தொழிற் சாலை முகாம், குருவளை

(நல்லூர்)

நாட்டின் நிலைமை சீராகும் பட்சத்தில் க பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குரிய மதிப்பீட்டு நிலையங்களை யாழ்ப்பாணத்திலும் அமைக்கப் பரீட்சை ஆணையாளர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்.

இலங்கையில்முப்பத்தைந்து நகரங்களில் மதிப்பீட்டு நிலையங்கள் நிறுவப்பட உள்ளன. கொழும்பு, மொறட்டுவ, மகரகம, ஹோமகம, பிலியந்தல, பாணதுறை, ஹொறனை, களுத்துறை, மத்துகம, கம்பகா நீர்கொழும்பு, காலி, அம்பலாங்கொடை, எல்பிட்டிய, மாத்தறை, தங்காலை,

(6ஆம் பக்கம் பார்க்க)

# மாணவர் அனுமதி எண்ணிக்கையை அதிகரிக்க துணைவேந்தர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு ஒவ்வொரு கல்வியாண்டிற்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையினை அதிகரித்து அனுமதிக்குமாறு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் புதிய அரசிற்கு விரிவான அறிக்கை ஒன்றை அனுப்பி வைக்கவுள்ளார்.

கடந்த சில வருடங்களாக சிறிலங்கா யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு பொதுவாக ஒவ்வொரு பீடங்களிற்கும் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு வந்துள்ளது.

இதில் மருத்துவம், விஞ்ஞானம் போன்ற பீடங்களில் சரிக்கு அரைவாசியாக மாணவர்களின் அனுமதி குறைக்கப்பட்டு வந்துள்ளது.

பழைய அரசின் இந்த நடவடிக்கையினால் தமிழ் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுவந்துள்ளனர்என்பதைச் சுட்டிக்காட்டும் விபரமான இவ் அறிக்கையினை தயாரிக்கும் நடவடிக்கையை துணைவேந்தர் தற்சமயம் மேற்கொண்டு வருகின்றார்.

இவ் அறிக்கை தயாரித்து முடிந்ததும் முதலில் புதிய அரசிற்கு அனுப்பிவைக்கப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## இடம் பெயர்ந்தவர்களை குடியமர்த்த உபகுழு

(கொழும்பு)

சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழ்பவர்களை வேறு இடங்களில் குடியமர்த்தும் பணிகளை மேற்கொள்வதற்கென அரசாங்கம் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவை உப குழு ஒன்றை நியமனம் செய்து இருக்கிறது.

தமது சொந்த இடங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் இவர்களை குடியமர்த்துவதற்கான சாத்தியம் தொடர்பாக இக் குழு தற்போது ஆராயும் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் தெரிவித்த யோசனையின் அடிப்படையில் இக் குழு, அமைக்கப்பட்டுள்ளது. இத் தகவல்களை அமைச்சரவைப் பேச்சாளர் தர்மசிறி சேனநாயக்கா நேற்று பிற்பகலில் கொழும்பு இசுறுபாயவில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறு

(6ஆம் பக்கம் பார்க்க)

## சம்பளமற்ற லீவிலுள்ள ஆசிரியர் மீது நடவடிக்கை

(நல்லூர்)

சம்பளமற்ற லீவில் தொடர்ந்து பாடசாலைக்குச் சமுகமளிக்காமல் உள்ள ஆசிரியர் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு வலயம் 1ற்கான கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி, சாவகச்சேரி. வேலணை, யாழ்-நல்லூர் கோட்டக் கல்வி அலுவலகங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களைப் பணித்துள்ளார்,

மேலும் வேலையிலிருந்து தாமாகவே விலகிய ஆசிரியர் ஊழியர்களின் பெயர்ப்பட்டியலை வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளர், வடக்கு - கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளருக்கும் அனுப்பி வைக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறும் இவர்களை மேலும் பணித்துள்ளார். (17)

கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது தற்போது சில செயற்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருவ

சந்திரிகா குமாரதுங்கவிடம் ஒப்படைக்கப்பட்டதாக வெரிதாஸ் வானொலிதெரிவித்தது

வடக்கு -கிழக்கு இனப்பிரச்

மூலம்சுட்டிகாட்டப்பட்டுள்ளதாக அச் செய்தி நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)

வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## லஞ்சம் ஊழல்குறித்து விசாரணை குழு அமைச்சரவை நேற்று அங்கீகாரம்

(கொழும்பு)

வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சில் முன்னைய நிர்வாகத்தின்போது இடம் பெற்ற லஞ்சம், ஊழல், வீண் விரயம் என்பன தொடர்பாக ஆராய ஜனாதிபதி ஆணைக் குழு ஒன்றை நியமிப்பதற்கான அங்கிகாரத்தை நேற்று அமைச்சரவை வழங்கியுள்ளது. இவ்வாறு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

லஞ்சம், ஊழல், வீண்விரயம் என்பன தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் அவை குறித்து கவனம் செலுத்தப்படும் எனவும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வாமேலும் தெரிவித்தார்.

## கூரே மீது நடவடிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் இருவருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது குறித்து ஐ. தே. கவின் தலைமைப் பீடம் ஆராய்ந்து வருவதாகக் கூறப்படுகிறது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஜேர்மனிக்குள் புகமுயன்ற ஆறு தமிழர்கள் கைது

(கொழும்பு)

ஜேர்மனிக்குள் சட்ட விரோதமாகப் புக முயன்ற ஆறு இலங்கைத் தமிழர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜேர்மனிக்குள் புகுவதற்காக போலந்து வழியாக இவர்கள் முயற்சித்தனர் எனவும் போலந்து எல்லைக் காவல் படையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள் ஜேர்மன் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## ஜனாதிபதி தேர்தலில் ரேலோ போட்டியிட முடிவு

### வேட்பாளரைத்தெரிய குழு நியமனம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதென தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) முடிவு செய்துள்ளது. வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக ஒரு குழுவும் நியமனம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு இக்குழுவின் செயலாளரான கே. சிவாஜிலிங்கம் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் தமது இயக்கத்தின் மத்திய குழுக் கூட்டத்திலேயே இம் முடிவு மேற்கொள்ளப்பட்டதாகவும் வேட்பாளரைத் தெரிவு செய்வதற்கென ஐந்து பேரைக்கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில்அதன்தலைவர் அடைக்கலநாதன் செல்வம், எஸ். வினோதலிங்கம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான கோ. கருணாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர் எனவும், ஐ தே.க. வோ அல்லது பொதுஜன ஐக்கிய முன்னணியோ புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணத் தவறிப் போய் இருப்பதாகத் தெரிவித்து அதனை எடுத்துக் காட்டவே தாங்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்ததாகக் கூறப்பட்டுள்ளது.

# எங்களை விட்டு தொண்டா எளிதில் போகமாட்டார்

## எதிர்க்கட்சித் தலைவர் காமினி நம்பிக்கை

(கொழும்பு)

எங்களை விட்டு தொண்டமான் எளிதில் போகமாட்டார் என்று தான் நம்புவதாக எதிர்க்கட்சித் தலைவர் காமினிதிசாநாயக்கா கூறியுள்ளார்,

அவர் மேலும் கூறுகையில் இ. தொ. கா. தலைவர் தொண்டமான் பாராளுமன்றத்தில் தனியான போக்கில் செயல்படுகிறார். ஆனால் எம்மை விட்டு எளிதில் போக மாட்டார் என்பதே எனது நம்பிக்கை எனவும் குறிப்பிட்டார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியை இ. தொ. கா. வும் தலைவர் தொண்டமானும் ஆதரிக்க இருப்பதாக வெளிவந்த செய்தியை சுட்டிக்காட்டி கேள்வி எழுப்பிய போது காமினி திசாநாயக்கா மேலும் கூறுகையில், தொண்டமான் நாட்டின் அதி முக்கியமான பொருளாதாரத்தைப் பேணும் தோட்டத் தொழிலாளர்களின் தலைவர் எனவும் தெரிவித்தார்.

## வரி விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

கொக்குவில் பூநாறிமரத்தடி சபாபதி வீதியில் தலையாளி வைரவர் கோவிலுக்கு முன்னதாக உள்ள ஒழுங்கையில் 1 1/2 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை தொடர்பு கொள்ளவும்:- சுசீலா-இந்திரகுமார் தலையாளி ஒழுங்கை கொக்குவில்.

(9395)

### மிருதங்க வகுப்பு

மிருதங்க வகுப்பு ஆரம்பம் முதல் ஆசிரியர் வகுப்பு வரை நடைபெறுறது. விரும்புவோர் தொடர்புகொள்ளவும் கோவிந்தபிள்ளை விஜயகுமார், 192/1 நாவலர் வீதி பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (9377)


## தொழில் இழந்தோர் விபரம்

இரண்டாம் ஈழப் போர் ஆரம்பமாகிய பின்னர் பத்தாயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் தமது தொழில்களை இழந்துள்ளனர் என்பது புள்ளிவிபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது; 2277 கட்டடத் தொழிலாளர்கள் 1000க்கும் அதிகமான மரவேலைத் தொழிலாளர்கள் 1000க்கும் அதிகமான இயந்திர நுட்ப வியலாளர்கள், 1500க்கும் அதிகமான தொழில் நுட்ப வியலாளர்கள் 350க்கும் அதிகமான மின் ஓட்டுத் தொழிலாளர்கள் மற்றும் 3000க்கும் அதிகமான ஏனைய தொழிலாளர்கள் என்போர் இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கிய பின் தொழிலின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## அம்புலன்ஸ் பாவனையில் இல்லை

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி இருந்தும் அவசர தேவைக்கு பாவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு மேல் இவ்வைத்தியசாலைக்கு இவ்வண்டி பயன்படுத்த முடியாமல் உள்ளது. (86)

## நாய்களுக்கு தடுப்பூசி

(கொழும்புத்துறை)

## சடல அடக்க இடம் விரைவில் முடிவு எடுப்போம்

### யாழ். மாநகர சபை ஆணையாளர் உறுதி

(யாழ்ப்பாணம்)

சடலங்களை அடக்கம் செய்வதற்குத் தேவையான இடம் தொடர்பாக விரைவில் அவசியமானவர்களுடன் கலந்துரையாடி முடிவு எடுக்கப்படும்.

யாழ் போதனா வைத்தியசாலைக்கு ஏற்பட்டுள்ள இட நெருக்கடிபற்றி யாழ் மாநகர சபை ஆணையாளர் தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் உரிமை கோரப்படாத சடலங்களை அடக்கம் செய்வதற்கு போதிய இடவசதியின்மையால் வைத்தியசாலை நிர்வாகம் யாழ் மாநகர சபையிடம் இடம் ஒதுக்கித்தருமாறு கேட்டிருந்தது தெரிந்ததே. இதுபற்றி மேலும் ஆணையாளர் தெரிவிக்கையில்,

வழக்கமாக அடக்கம் செய்யப்படும் இடத்திற்கு அருகில் மேலும் இடத்தை விஸ்தரிப்பதற்கு அக்காணி மானிப்பாய் பிரதேச சபைக்குச் சொந்தமானதாக உள்ளது. அத்துடன் இக்காணியைப் பாவிப்பதற்கு மானிப்பாய் பகுதியில் உள்ள சமய நிறுவனம் ஒன்று எதிர்ப்புத் தெரிவித்துள்ளது, இதனால் இந்த விடயம் தொடர்பாக அவசியமானவர்கள் அனைவருடனும் கலந்துரையாடி ஒரு தீர்க்கமான முடிவு விரைவில் எடுக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு உள்ள காணி பற்றாக்குறை நீக்கப்படும் (88)(நி)

## மேலும் 500 பீப்பாய் தார் தருவிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபை தனது எல்லைக்குட்பட்ட வீதிகளை திருத்துவதற்கு மேலும் ஐந்நூறுபீப்பாய் தார் கொழும்பில் இருந்து தருவிப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகிறது.

முன்னர் தருவிக்கப்பட்ட ஒருதொகுதி தாரைக்கொண்டு யாழ் நகரில் பல வீதிகள் புனரமைப்புச்செய்யப்பட்டுள்ளது மேலும் பழுதடைந்துள்ள வீதிகளைத் திருத்துவதற்கு ஐந்நூற்றுபீப்பாய் தாரை கொழும்பில் இருந்து தருவிப்பதற்கு யாழ் மாநகர சபை ஆணையாளர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். (88)(நி)

### கண்டெடுப்பு

மூவரின் ஜாதகக் குறிப்பு மற்றும் மூக்குக் கண்ணாடி அடங்கிய பை ஒன்று நல்லூர் கோயில் அருகே பருத்தித்துறை வீதியில் கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது, உரியவர் அடையாளம் காட்டி பெறவும்.

## இம்மாத இறுதிக்குள் 5000 அகதிகள் திரும்புவர்

இம்மாத இறுதிக்குள் மேலும் 5000 இலங்கை தமிழ் அகதிகள் இந்தியாவிலிருந்து திருப்பியனுப்பப்படவுள்ளதாக இந்திய தூரதர்ஷன் தெரிவித்துள்ளது.

இதன் அடிப்படையில் 1200 தமிழ் அகதிகள் சென்னையிலிருந்து அடுத்த வாரம் புறப்படவுள்ளனரென்றும், 3 அணிகளாக, அகதிகள் அனுப்பப்படுவர் என்றும் இந்திய வானொலி தெரிவித்துள்ளது.

### நிகழ்வுகள்

செருடாவில் இராஜசிறி இடம் பெயர்ந்தோர் முகாமில் புதிய வீடுகள் கையளிக்கும் வைபவம் நாளை வெள்ளி பிற்பகல் 2 மணிக்கு இடம் பெறும்.

★

புங்குடுதீவு கதிர்காம விசேட அபிஷேக ஆராதனை விழா இன்று வியாழன் காலை 8. 30 மணிக்கு செந்தில் கதிர்வேலாயுத சுவாமிகள் கோயிலில் இடம்பெறும்.

★

### உற்சவம்

(பருத்தித்துறை)

நாகர்கோவில் பூர்விகநாகதம்பிரான் ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்று புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது 20-ம் திகதி பகல் திருவிழாவும் 23-ம் திகதி இரவு தீர்த்தத்திருவிழா ஆரம்பமாகி 24-ம் திகதி அதிகாலை 5 மணிக்கு கடல் தீர்த்தத் திருவிழாவும் அன்றைய தினம் பகல் பூங்காவனத்திருவிழாவும் நடைபெறுமென ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது

## சூரியகந்த புதை குழியில் மேலும் எலும்புகள் மீட்பு

(கொழும்பு)

சூரியகந்த மனித புதைகுழியில் மேலும் பல மனித எலும்புகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன நேற்றுக்காலை எம்பிலிப்பிட்டியவில் உள்ள சூரியகந்த புதைகுழிகள் இரு இடங்களில் தோண்டப்பட்டன. அப்போது சில எலும்புகளும் நீண்ட கேசமும் பற்களும் கண்டெடுக்கப்பட்டன.

இவையும் மண் மாதிரியும் விஞ்ஞான பரிசோதனைக்காக கொழும்பு அனுப்பப்படவுள்ளது இம்மண்ணின் மாதிரி புதைகுழியின் காலத்தை தீர்மானிக்க உதவும் இன்னும் பல புதைகுழிகள் இருப்பதாக நிபுணர்கள் கருதுகின்றனர். இவை அடுத்த சில தினங்களுள் தோண்டப்படும் என கூறப்படுகிறது.

காலநிலை மோசமாக இருந்தும் புதைகுழிதோண்டும் பணி நேற்றுக் காலை 9 மணிக்கு ஆரம்பமானது; கொழும்பு பிரதம சட்டவைத்திய அதிகாரி, வெளிநாட்டு மருத்துவ குழு. அரச இரசாயன ஆய்வாளர், கைவிரல் அடையாள பணியகம் பொலிஸ், புவியியல் திணைக்களம் என்பவற்றால் மேற்கொள்ளப்படும் இப்பணிக்கு பேராசிரியர்கள் நந்ததாசகோதாகொட, சந்திரசிறி நெரியல் ஆகியோர் உதவி வழங்குகின்றனர்.

## ரஷ்ய ஆயுத கொள்வனவு இராணுவ அதிகாரி பின்னணியில்

(கொழும்பு)

ரஷ்யாவில் பெறப்பட்ட -365 கோடி ரூபா பெறுமதியான ஆயுத கொள்வனவின் பின்னால் இராணுவத்தின் முக்கிய உயர் அதிகாரிகள் இருப்பதாக தெரியவந்துள்ளது.

மேற்படி ஆயுத கொள்வனவு தொடர்பாக இடைத்தரகராக செயற்பட்ட பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி நாட்டை விட்டு வெளியேறி இருப்பதாகவும் இவரிடம் இருந்த ஆவணங்கள் தற்போது காணாமல் போயுள்ளன

## அமைச்சு ஆவணங்கள் மர்மமான மறைவு

(கொழும்பு)

சகல அமைச்சுக்களில் இருந்தும் முக்கிய ஆவணங்கள் மிகவும் இரகசியமான முறையில் மறைந்து விட்டுள்ளது

இது தொடர்பாக இரகசிய பொலிசாருக்கும் குற்றபுலன் விசாரணை பிரிவுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## 5000 சட்டவிரோத துப்பாக்கிகளை பொதுமக்களின் உதவியுடன் களைய பொலிசார் முயற்சி

(கொழும்பு)

1988 ஆம் ஆண்டிலிருந்து 1990-ம் ஆண்டு வரை இடம் பெற்ற கிளர்ச்சியின் போது பல்வேறு அரசியல் கட்சிகளுக்கும் வழங்கப்பட்டிருந்த 5000 சுடுபடை கலன்களை (துப்பாக்கிகளை) துரிதமாக மீளப்பெறுவதற்கு பொலிசார் பொதுமக்களின் உதவியைக் கோரியுள்ளனர்.

இந்தச் சுடுபடைக் கலன்களை மீளப் பெறுமாறும் அவற்றைத் துரிதமாக மீளப் பெறுவதற்கு பொதுமக்களின் உதவியை நாடுமாறும் பொலிஸ்மா அதிபர் பிராங் டிசில்வா இரு வாரங்களுக்கு முன்னர் பிரதி பொலிஸ்மா அதிபர்களுக்கும் பொலிஸ் சுப்பிரின்டன்களுக்கும் பணிப்புரை வழங்கியிருந்தார் என்று பொலிஸ் தலைமை அலுவலக சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

லைசென்ஸ் பெறாத சகல சுடுபடை கலன்களையும் மீளப்பெறுமாறும் அரசாங்கத்தின் வேண்டுகோள்களைத் தொடர்ந்து தமது சுயவிருப்பத்தின் பேரில் ஆயுதங்களை ஒப்படைக்கத் தவறியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸ்மா அதிபர் தனது பணிப்புரையில் கேட்டிருந்தார்.

களனி கம்பஹா பிரிவுகளிலிருந்து மட்டுமே ஆயுதங்கள் ஒப்படைக்க பட்டுள்ளன என்றும் அந்த அதிகாரி சொன்னார்.

சட்ட விரோதமாக ஆயுதங்களை வைத்திருப்பவர்கள் பற்றித் தகவல் தெரிந்திருப்பின் அந்தத் தகவல்களைப் பொலிஸ் தலைமைக் காரியாலயத்தில் தெரிவிக்கும்படி கேட்டுள்ளார்.

### கருத்தரங்கு

தொல்புரம் மத்திய சன சமூக நிலையமும் தொல்புரம் மத்தி சர்வோதய கிராமோதய சமித்தியும் இணைந்து நடாத்தும் பாலர் கல்வி ஊக்குவிப்பு கருத்தரங்கு அண்மையில் சமித்தித் தலைவர் திரு சி. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது

மேற்படி கருத்தரங்கு நிகழ்வில் பாலர் கல்வியும் போஷாக்கும் என்ற தலைப்பில் சன சமூகநிலையம், சமித்தி ஆகியவற்றின் செயலர் திரு. இ. மகேந்திரம் அவர்கள் சிறப்புரையாற்றினார், நிகழ்வின் இறுதியில் சிறுவர்களின் கல்வி ஊக்குவிப்பு பற்றி விலங்கியல் சம்பந்தமான வீடியோ படக்காட்சியும் காண்பிக்கப்பட்டது (14)

### விளையாட்டுப் போட்டிகள்

(தொல்புரம்)

அச்செழு பூலசிட்டி வளர்மதி சனசமூக நிலைய பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி அண்மையில் வெகு சிறப்பாக நடைபெற்றது தேசிய சர்வோதய சிரமதான இயக்க ஆதரவுடன் இயங்கி வரும் மேற்படி பாலர் பாடசாலை விளையாட்டுப் பெருவிழாவில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய இளைப்பாறிய உதவி அதிபர் திரு. வை. தனேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். சர்வோதய பாலர் பாடசாலைகளின் இணைப்பாளர் செல்வி சா. திலகராணி உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டு நிகழ்வினை சிறப்பித்தனர் போட்டிகளில் பங்கு பற்றிய சிறுவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. [41]

★

புத்தூர் கிழக்கு மத்திய சனசமூக நிலைய ராஜன் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி அண்மையில் சட்டத்தரணி திரு சி. சிவநேசன் தலைமையில் நடைபெற்றது தேசிய சர்வோதயத்தின் ஆதரவில் இயங்கும் மேற்படி பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டிகளில் மழலைகளின் மகிழ்வுறும் நிகழ்வுகளை அநேக மக்கள் கண்டு களித்தனர். நிகழ்வின் இறுதியில் போட்டியில் பங்குபற்றிய சிறார்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (41)

### தீர்த்த திருவிழா

சரித்திரப்பிரசித்தி பெற்ற ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழா எதிர்வரும் 18-ம் திகதியும் கடல்தீர்த்தத் திருவிழா 19-ம் திகதியும் கேணித்தீர்த்தத் திருவிழா 20-ம் திகதியும் நடைபெறும் (25)

## நினைவு கூருகின்றோம்...

15-09-1994

1989-ம் ஆண்டு இதே தினத்தில் திருமலை-கொத்திக்குளம் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

லெப். பூபதி (அந்தோனிச்சாமி உதயகுமார் - 3-ம் கட்டை - திருமலை)

யாழ் - நீர்வேலிப் பகுதியில் தேசவிரோதசக்திக

[கொழும்புத்துறை]

அச்சுவேலிப் பகுதியில் உள்ள வீட்டு வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பு ஊசி மருந்து ஏற்றப்படவுள்ளது.

கோப்பாய் பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலகம் பிரிவிலுள்ள சகல சனசமூக நிலையங்களில் வைத்து எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமையும், 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் ஆகிய இரு நாட்களிலும் தடுப்பு ஊசி மருந்து ஏற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

லில் இடம்பெறும்.

★

சைவ பரிபாலன சபையின் கடந்த ஆண்டு சைவநெறி தேர்வில் சித்தி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிறு காலை 9 மணிக்கு நடைபெறும் யாழ் கல்வி வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் செல்வி. திலகவதி பெரியதம்பி பரிசில்களை வழங்குவார்.

★

சண்டிலிப்பாய், தெல்லிப்பழை கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று வியாழன் பிற்பகல் 3 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

நடைபெறுமென ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது

## பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க பாவனையாளர்களுக்குரிய பூமை மாத இறுதி இரண்டு வார நிவாரணப் பொருட்கள் நேற்று புதன் தொடக்கம் சங்க நிவாரணக்கிளைகளில் வழங்கப்படுகிறது பாவனையாளர்கள் இம்மாதம் 20-ம் திகதிக்கு முன் தமது பொருட்களைப் பெற்றுக்கொள்ளுமாறும் 20-ம் திகதிக்குப் பின்னர் பொருட்கள் வழங்கப்படமாட்டாது எனவும் சங்க தலைமைக் காரியாலயம் அறிவித்துள்ளது. (22)

பொலிஸ் தலைமை அலுவலக இரேஷ் - அதிகாரி ஒருவர் லயத்தில் தெரிவிக்கும்படி கேட்டுள்ளார்.

## 1200 விவசாயிகளுக்கு நெற்செய்கை கடன் வழங்கல்

யாழ் மாவட்டத்தில் 1994/95 கால போகத்தில் நெற்செய்கையை மேற்கொள்ள விருக்கும் 1200 விவசாயிகளுக்கு கடன் வழங்குவதற்கான நடவடிக்கையினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

நெற்செய்கையை மேம்படுத்துமுகமாக கிராமிய உற்பத்திக் குழுக்களூடாக வழங்கப்படும் இக்கடன்கள் மூலம் விவசாயிகள் பெரிதும் நன்மையடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தடைநீக்கிய பொருட்கள் யாழ் எடுத்துவர முயற்சி

[யாழ்ப்பாணம்]

குறிப்பிட்ட சில பொருட்கள் மீதான தடை தளர்த்தப்பட்டதை அடுத்து அப்பொருட்கள் யாழ் குடாநாட்டிற்கு பெருமளவில் எடுத்துவரப்படுவதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்படுகின்றன.

முதல் தடவையாக நாளை வெள்ளிக்கிழமை பருத்தித்துறைக்கு வந்துசேரும் என எதிர்பார்க்கப்படும் மாகோ கப்பலில் சீமெந்து எடுத்துவரப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது.

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கும், தனியார் வர்த்தகர்களுக்கும் சீமெந்து ஏற்றிவரப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பலில் மண்ணெண்ணெயும் ஏற்றிவரப்படுவதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (தி)


UNIVERSITY OF JAFFNA

POST-GRADUATE DIPLOMA IN PUBLIC ADMINISTRATION ADMISSION TEST - 1993

The above Examination will be held on 17-09-94 at 9.00a m; in the Ramanathan Hall University of Jaffna. The applicants who are eligible to sit for the above Examination are requested to collect the admission card from 16-09-94 in the Examination Branch during the office hours.

REGISTRAR

(சி-10335)



## ஏல விற்பனை

### கட்டிடப் பொருட்கள்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கட்டிடப் பொருட்கள் 20.09.94-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்படும். பொருட்களை வாங்க விரும்புவோர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை நீர்த் தாங்கிக்கு அருகிலமைந்துள்ள எமது பிரதேச அலுவலகத்தில் சமுகமளிக்கவும்.

ஏலத்தில் வெற்றி கொள்வோர் உடனடியாக உரிய பணத்தைச் செலுத்தி, அப்பொழுதே பொருட்களை அகற்றிக் கொள்ளுதல் வேண்டும்.

பொருட்களை 20.9.94 அன்று காலை 9.00மணி முதல் பார்வையிடலாம்.

மேலதிக விபரங்களுக்கு யாழ் கடற்கரை வீதியிலமைந்துள்ள நிர்மாணத் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தை அலுவலக நேரத்தில் நாடலாம்.

சு. சுந்தரகுமார்
பதில் பிரதம பொறியியலாளர்,
நிர்மாணத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
நிர்மாணத் திணைக்களம்,
கடற்கரை வீதி.
யாழ்ப்பாணம்.

(சி-10336)



## வடமாகாண தெ. ப. பொ. கூ. சங்கங்களின் சமாசத்தின்

## முக்கிய அறிவித்தல்

இன்று நல்லூரில் ஆரம்பமாகும் தியாகி திலீபன் அவர்களின் நினைவு நாள் உண்ணா நோன்பில் கலந்து கொள்ளும் பொருட்டு எமது நிறுவனம் மூடப்பட்டிருக்கும் என்பதனை எமது அங்கத்துவ சங்கங்களுக்கும் எமது ஸ்தாபனத்துடன் தொடர்பு கொள்வோருக்கும் அறியத்தருகின்றேன்.

பொதுமுகாமையாளர்,
வடமாகாண தெ. ப. பொ.
கூ. ச. சமாசம்,
யாழ்ப்பாணம்.

(சி-10337)



கட்டை - திருமலை)

யாழ் - நீர்வேலிப் பகுதியில் தேசவிரோதசக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் ஜெகன் - அக்காச்சி** (சிவகுருநாதன் சிறிகாந்தன் - நீர்வேலி தெற்கு, யாழ்.)

**மதன்** (சினாசித்தம்பி மதனதாஸ் மதன் வீதி, நீர்வேலி - யாழ்)

1990 ம் ஆண்டு யாழ் - கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய.

**கப்டன் கிரோராஜ்** (சண்முகசுந்தரம் பிரபாகரன் - அச்செழு, நீர்வேலி - யாழ்.)

வவுனியாவில் சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த,

**லெப். ரகீம் - ராஜீவ்** (காசிம் துலானி - புளியங்குளம் - வவுனியா)

திருமலை - மூதூர், நிலாப்பொலவில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப். பார்த்தீபன்** (கனகசிங்கம் கோடீஸ்வரன் - கங்குவேலி, மூதூர் - திருமலை)

1991-ம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். வில்லியம்** [ராஜகோபால் விவேகானந்தன் - மூதூர் - திருமலை]

**2-ம் லெப். மலர்விழி** (கிருபாதேவி மயில்வாகனம் - மூதூர் - திருமலை)

**இந்திரன் - நித்திலன்** (இராசையா பஞ்சலிங்கம் - தர்மபுரம் - கிளிநொச்சி)

**பரந்தாமன்** (அருளானந்தம் அமிர்தராஜ் - தாவடி தெற்கு. கொக்குவில் - யாழ்)

1992 ம் ஆண்டு கட்டைக்காட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர்ச்சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் புண்ணியம்** (கனகலிங்கம் புவனேஸ்வரன் - யோகபுரம், மல்லாவி - கிளிநொச்சி)

இதே தினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினராலும், இந்தியப்படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி- 10334)

## முன்னாள் அமைச்சர்களின் 544 ஆடம்பரக் கார்கள்

(கொழும்பு)

முன்னைய அரசாங்கத்தின் பதவிக்காலத்தின் போது அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்கள் மற்றும் கருத்திட்ட அமைச்சர்களின் பாவனையில் இருந்த 544 வாகனங்கள் கொள்கை, திட்டமிடல் அமைச்சால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் அநேகமானவை சொகுசு ஆடம்பர வகைகளை சேர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

முன்பு ஆட்சிப் பொறுப்பில் பிரேமதாசா இருந்தபோது அமைச்சரவையில் இருக்கும் எவரும் ஆறுக்கு மேற்பட்ட வாகனங்களை பயன்படுத்த அவர் அனுமதி அளிக்கவில்லை. ஆனால் பிரேமதாசாவின் மறைவுக்குப் பின் அமைச்சர்கள் தத்தம் அமைச்சுக்கள் மூலமாக ஆடம்பர வாகனங்களுக்கான இறக்குமதியில் ஈடுபட்டு இருந்தனர் எனவும், இதனால் எத்தனை சொகுசு வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டன என்பதும், அவை எவ்விதம் பயன் படுத்தப்பட்டன என்பதும் மர்மமாகவே இருக்கிறதாம்.

## ஆடம்பர வாகனங்களை எடுத்துச் செல்லத் தடை

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து பிரதேச சபைத் தலைவர்களாலும் மாகாணசபை அங்கத்தவர்களாலும் இறக்குமதி செய்யப்பட்ட, தலா 50 இலட்சரூபா பெறுமதியான ஆடம்பர வாகனங்கள் எடுத்துச் செல்லப்படுவதை துறைமுக கப்பல் துறை அமைச்சு நிறுத்தி வைத்துள்ளது.

இது தொடர்பான பூரண விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நிதியமைச்சுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் 17 பஜிரோ ஜீப் வண்டிகள் மற்றும் ஆடம்பர வாகனங்களும் அடங்கும் 15 வாகனங்கள் பிரதேச சபைத் தலைவர்கள் பெயரிலும் சில நிதியமைச்சு அதிகாரிகளின் பெயரிலும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

பிரதேச சபைத் தலைவர்கள் பாரிய தொகையை இவ்விதம் வாகன இறக்குமதிக்கு பயன்படுத்தியுள்ளமையும் விசாரிக்கப்படவுள்ளது.

நட்டஈட்டு கொடுப்பனவு

## ஜே. ஆர் இன் ஊழல் அரசு கண்டுபிடிப்பு

(கொழும்பு)

இருபத்தி ஐந்து லட்சம் ரூபா நட்டஈட்டுக் கொடுப்பனவு தொடர்பான ஊழல் ஒன்றில் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தொடர்புகொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வூழல் தொடர்பான விசாரணைதொடருவதாகவும் இவருக்கு எதிராக சட்டபூர்வ நடவடிக்கை எடுப்பது தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

## தமிழ்க்குழுக்களின் ஆயுதம் உடனடியாக களையப்படாது

-பிரதி பாதுகாப்பு அமைச்சர்

(கொழும்பு)

தமிழ் ஆயுதக் குழுக்களிடமிருந்து உடனடியாக ஆயுதங்கள் களையப்பட மாட்டாது என்றும் எனினும் இக்குழுவினர் கொழும்பில் ஆயுதங்களுடன் நடமாடுவது தடைசெய்யப்படும் என்றும் பிரதிபாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

எனினும் இக்குழுவினர் வடக்கு,கிழக்கில் ஆயுதங்களுடன் நடமாட முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

## தொண்டமான் நழுவலால்

## சமாதான முயற்சிகளில் படையினரின் சந்தேகங்கள்

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பாக அப் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் மத்தியில் பல சந்தேகங்கள் தோன்றியுள்ளதாக பலாலி ராணுவ முகாமிற்கு சென்று திரும்பிய ''ராவய'' பத்திரிகை செய்தியாளர் தெரிவித்துள்ளார். இச் சந்தேகங்கள் குறித்து இராணுவத்தினர் தம்மிடம் வினாவியதாகவும் அவர் தெரிவித்தார்.

சமாதான முறையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளின்போது தேசிய மட்டத்தில் அல்லது சர்வதேச மட்டத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன்மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

தமிழ் மக்கள் நாடுமுழுவதும் சென்று வாழும் உரிமையைப் பெற்றுள்ளனர். பேச்சுவார்த்தைகளின் பின்னர் தமிழர் வாழும் வடக்கு மாகாணத்தில் தாம் விரும்பிய பகுதிக்குச் சென்று சிங்கள மக்கள் வாழ முடியுமா?

விடுதலைப் புலிகளால் தற்போது அமைக்கப்பட்டுள்ள காவல்துறை, நீதிமன்றம், வங்கி போன்ற நிர்வாக வேலை அமைப்புகளுக்கு பேச்சுவார்த்தை வெற்றியளித்தால் என்ன நடக்கும்?

சமாதானப் பேச்சுக்கள் வெற்றியளித்தால் விடுதலைப் புலிகளிடம் இருக்கும் ஆயுதங்கள், வெடிப்பொருள்கள் மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா? அல்லது அவர்களும் ஒரு சட்டபூர்வமான இராணுவத்தைப் போன்று இயங்குவார்களா?

மீண்டும் யுத்தம் வெடித்தால் பாதுகாப்பு அமைச்சராக கேணல் அனுருத்த ரத்வத்த பதவி வகித்து படையினருடன் சேர்ந்து யுத்தம் செய்ய முன் வருவாரா?

சமாதானம் ஏற்பட்டால் ஐந்து வருடம், 12வருடம், 22 வருடம் என சேவை செய்யும் உயர் அதிகாரிகள் இராணுவத்திலிருந்து ஓய்வுபெற அனுமதி அளிப்பீர்களா? என்ற கேள்விகளை அவர்கள் கேட்டதாக மேலும் அவர் குறிப்பிட்டார்.

## பேச்சுக்கான ஒழுங்கு பற்றி லயனல், ரத்வத்த ஆராய்வு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் இனப் பிரச்சினை குறித்து ஆரம்ப பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான ஒழுங்கு முறைகள் குறித்து பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தயுடன் தகவல்துறை அமைச்சின் செயலாளர் லயனல் பெர்ணாண்டோ ஆரம்பித்ததாக தெரிய வந்துள்ளது.

விடுதலைப் புலிகளின் பதில் கிடைத்ததும் ஆரம்ப கட்ட பேச்சுக்களை நடாத்துவதற்கென புதிய அரசானது தகவல்துறை அமைச்சின் செயலாளர் லயனல் பெர்ணாண்டோவை தமது சார்பில் யாழ்ப்பாணம் அனுப்ப முடிவு செய்திருந்தமை தெரிந்ததே.

இதனை அடுத்தே தனது யாழ். விஜயம் தொடர்பான ஒழுங்கு முறைகள் குறித்து லயனல் பெர்ணாண்டோ கடந்த வெள்ளிக்கிழமை பிரதி பாதுகாப்பு அமைச்சரை சந்தித்து கலந்தாலோசித்ததாக கொழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

விரைவில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த யாழ். வரும்போது லயனல் பெர்ணாண்டோவுடன் யாழ். அரசாங்க அதிபர் திரு. காமாணிக்கவாசகரும் உடன் வருவார்என நம்பப்படுகிறது.

## ஜனாதிபதி தேர்தலின் பின் அரசியலமைப்புதிருத்தங்கள்

- அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலின் பின்னர் அரசியலமைப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும், வெளிநாட்டு வர்த்தக, நீதி, அரசியலமைப்பு அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு இராஜதந்திரிகள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். நிறைவேற்று ஜனாதிபதி முறை முற்றாக ஒழிக்கப்படும். இம்முறையினால் மக்களுக்கு பெரும் பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புண்டு, எனவே இம்முறை நீக்கப்பட்டு பாராளுமன்றத்துக்கு அதிகாரம் வழங்க அரசு தீர்மானித்திருப்பதாகவும் அவர் அங்கு தெரிவித்தார்.

## பரீட்சை மூலமே ஆசிரியர் நியமனம் தொண்டர் ஆசிரியர் நியமனம் இல்லை

கல்வி, உயர்கல்வி அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக பதவி வகித்தோரின் பதவிகள் நிரந்தரமாக்கப்படமாட்டாதெனவும், இனிமேல் தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனங்களும் வழங்கப்படமாட்டாது எனவும் கல்வி உயர்கல்வி அமைச்சர் றிச்சேட் பத்திரன தெரிவித்துள்ளார்.

தமது இந்த நடவடிக்கை குறித்து எவரும் தம்மீது கோபமடையவேண்டாம் எனவும் அமைச்சர் கேட்டுள்ளார். ஆசிரியர் நியமனங்களுக்கு பரீட்சைகளை நடத்தி அதில் கூடுதல் புள்ளிகளைப் பெற்றோருக்கே வழங்க கொள்கை அளவில் முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் ஆசிரியர் தொழிலின் கௌரவத்தை நான் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. பொருத்தமற்றவர்களும் திறமையற்றவர்களும் இன்று ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ளனர். இதற்கு நான் இனியும் இடமளிக்க மாட்டேன். ஆசிரியர் தொழில் புனிதமானது; பொறுப்பு வாய்ந்தது. எனவே அதனைத் திறம்படச் செய்ய வேண்டியிருக்கிறது.

ஆசிரியர் சேவையை வழங்குவதற்கான தொண்டர் ஆசிரியர் கால சேவை, ஜனசவிய கிடைப்பனவும் பத்திரங்களுக்குப் புள்ளி சேர்த்து கணக்கிட்டு ஆசிரியர் தொழிலை வழங்கினார்கள். நாம் அதனைச் செய்யமாட்டோம். பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு நேர்முகப் பரீட்சை நடத்தி அவர்களை ஆசிரியர் தொழிலில் சேர்த்துக்கொள்வோம். நேர்முகப்பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கமாட்டோம். நேர்முகப்பரீட்சையின்போது கல்வித்தராதரப் பத்திரங்களை மாத்திரமே பார்ப்போம். பட்டதாரிகள் அனைவருக்கும் ஆசிரியர் தொழிலை வழங்குவோம். அவர்களுக்கு மீண்டும் பரீட்சை வைக்கவேண்டிய அவசியமில்லை. பட்டதாரி தராதரத்திற்கு பொருத்தமானதாக தொண்டர் ஆசிரியர்களை சங்கீத ஆசிரியர்களாகவும் சேர்த்துக்கொண்டுள்ளனர். ஆனால் அவர்களுக்கு சங்கீதம் தெரியாது. இதனாலேயே ஆசிரியர்களின் நிலை மாற்றியமைக்கப்படுகிறது என்றார்.

## காணாமற் போனோர் குறித்துஜனாதிபதிவிளக்கம்

செயலகம் விடுத்தது

(கொழும்பு)

விருப்பத்திற்கு மாறாக அகற்றப்பட்டவர்கள் மற்றும் காணாமற் போனவர்கள் விடயத்தையிட்டு ஜனாதிபதி ஆணைக்குழு நியமிப்பது தொடர்பாக ஜனாதிபதி தயக்கம் காட்டி வருகிறார் என்று சில பத்திரிகைகள் வெளியிட்ட செய்தி குறித்து ஜனாதிபதி செயலகம் விளக்கம் தெரிவித்து நேற்று அறிக்கை வெளியிட்டது.

அவ் அறிக்கையில் தவறான தகவல்களின் அடிப்படையிலும், தவறானவிளக்கங்களின் அடிப்படையிலும் இச்செய்தி வெளியிட்டிருப்பது குறித்து ஜனாதிபதி கவலை கொண்டிருக்கிறார். விருப்பத்திற்கு மாறாக அகற்றப்பட்டோர் மற்றும் காணாமற் போனவர்களுக்கு நிவாரணம் அல்லது நட்டஈடு கொடுக்கப்படுவதற்கு ஜனாதிபதி எதிரானவரல்ல. 1988-ம் ஆண்டுமுதல் இன்று வரை இடம்பெற்ற இத்தகைய சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்துவதற்கு ஆணையிடாமல் இருப்பதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன.

1991 ஜனவரி 11-ம் திகதி முதல் இத்தகைய குழுஒன்று செயற்பட்டு வருவதும் அராஜகங்கள் மற்றும் குழப்பங்கள் நிலவிசட்டமும், ஒழுங்கும் சீர்குலைந்திருந்த சூழலும் இத்தகைய சம்பவங்கள் பற்றி விசாரணை நடத்த நம்பத்தகுந்த சாட்சிகள் இருப்பதும் காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## லஞ்ச விசாரணைக் குழுவுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்படும்

அமைச்சர்களின் மனைவிமார் சொத்தும் பரிசீலனை

(கொழும்பு)

லஞ்ச ஊழல் என்பவற்றுடன் தொடர்பான அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், ... னிக்கவும் அமையவுள்ள லஞ்ச விசாரணைக் குழுவிற்கு மேலதிக அதிகாரம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. ... எதிர்பார்க்கப்படுகிறது. எவராவது தனது சொத்து விபரங்களை வெளியிட மறுப்பு தெரிவிப்பின் அவர் குற்ற...

## சுதந்திரக் கட்சியில் மீண்டும் அநுரா இணைய முயற்சி

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியில் தனக்குகிடைத்துள்ளசகலபத... வராக நியமனம் செய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரிய வருகின்றது.

யப்படும் என்றும் பிரதிபாது அவர் கூறியுள்ளார்.

## தொண்டமான் நழுவலால் ஐ. தே.க.தோல்வி அடையும்

### அவதானிகள் கருத்து

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி மேலும் பின்னடைவை சந்திக்கும் என்றும் இதனால் அக்கட்சி படுதொல்வியை சந்திக்கும் என தெரிய வருகின்றது.

பொதுத் தேர்தலின் போது ஒத்துழைப்பைவழங்கிய எஸ். தொண்டமான் தற்போது பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு வழங்க முன்வந்ததைத்தொடர்ந்து இந் நிலை ஏற்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## இ.தொ.கா சாராத பிரதிநிதி சந்திரசேகரன் மட்டுமே

### பீ. பீ. தேவராஜ் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தத்தின் அடிப்படையில் வாக்குரிமை பெற்ற மலையக தொழிலாளர்கள் மத்தியிலிருந்து 1977ம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது இ. தொ. கா. தலைவரான எஸ். தொண்டமான் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். இவ்வாறு முன்னாள் அமைச்சரும் இ. தொ. கா. வின் அரசியல் பிரிவு பிரமுகருமான பீ. பீ. தேவராஜ் தெரிவித்துள்ளார். இலங்கை வானொலிக்கு விசேட பேட்டி ஒன்றை அளித்த அவர் அதில் மேலும் கூறுகையில் இப்போது பாராளுமன்றத்தில் நுவரெலியா மாவட்டம், கண்டி மாவட்டம், பதுளை மாவட்டம், கேகாலை மாவட்டம் போன்றவற்றிலிருந்து இ. தொ. கா. வின் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்- மலையகத்திலிருந்து இ. தொ. கா. வை சாராமல் இதுவரையில் வெற்றி பெற்ற ஒரே ஒரு வேட்பாளர் தற்போதைய அமைச்சர் பெ. சந்திரசேகரன் மட்டுமே ஆகும் எனவும் குறிப்பிட்டார்.

## ஒப்பந்த ஆங்கில ஆசிரியர் விபரம் தரப் பணிப்பு

(நல்லூர்)

ஒப்பந்த அடிப்படையில் பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர் பற்றிய விபரங்களை இம்மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் தமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு யாழ் கல்வி வலயம் 1 இற்கான கல்விப்பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி வலயம் 1 இற்கான கோட்டக் கல்விப் பிரதிக்கல்விப் பணிப்பாளர்களைப் பணித்துள்ளார்.

பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கைகளும் தற்போது ஒப்பந்த அடிப்படையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தொகை மேலதிகமாக தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கை ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

(கொழும்பு)

லஞ்ச ஊழல் என்பவற்றுடன் தொடர்பான அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், எம்.பிகள் ஆளுனர்கள் என்பவர்களின் மனைவிமாரின் வங்கி கணக்குகளை பார்வையிடவும், சொத்துக்களை கவனிக்கவும் அமையவுள்ள லஞ்ச விசாரணைக் குழுவிற்கு மேலதிக அதிகாரம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான நகல் திட்டம் இம்மாதம் 21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. எவராவது தனது சொத்து விபரங்களை வெளியிட மறுப்பு தெரிவிப்பின் அவர் குற்றவாளியாக கருதப்பட்டு நீதிமன்றில் ஆஜர்செய்யப்படுவதுடன் சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படும் இத்தகையவர்களுக்கு குறைந்தது 5 வருட சிறை அல்லது 100 000 ரூபா அபராதம் விதிக்கப்படலாம்.

விசாரணையின் போது எவராவது தனிப்பட்ட பழிவாங்கலுக்காக பொய் தகவல் வழங்கியது கண்டு பிடிக்கப்பட்டால் 7 வருட சிறைத் தண்டனையும் 200,000 ரூபா அபராதமும் விதிக்கப்படும் உத்தேச விசாரணைக்குழு கூட்டுத்தாபனங்கள், திணைக்களங்கள் மாநகரசபைகள் என்பவற்றில் உள்ள கோப்புகளை பரிசீலிக்கவும் அதிகாரம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## உள்ள கார்களை கொண்டு சமாளிக்க அரசு திட்டம்

(கொழும்பு)

அமைச்சுகளில் உள்ள மேலதிக வாகனங்களைப் பெற்று வாகன வசதியில்லாத எம்.பிகளின் போக்குவரத்து தேவைகளை பூர்த்தி செய்ய புதிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கென அமைச்சுகளில் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை பற்றிய விபரங்களைப் பெறவும் எத்தனை வாகனங்கள் மேலதிகமாக உள்ளன என்பதை அறியவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

புதிதாக வாகனங்களை இறக்குமதி செய்வதை விட நாட்டில் உள்ள வாகனங்களைக் கொண்டே தேவைகளை பூர்த்தி செய்து வீண் விரயத்தை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## கார் பாவனைத் தடையை டி. பியே நீக்கியிருந்தார்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசாவின் மறைவுக்கு பின்னரே பெறுமதி மிக்க சொகுசு வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டதாக தற்போது நடைபெறும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

ஜனாதிபதி பிரேமதாசா ஆட்சி செய்தபோது அமைச்சரொருவர் ஆறுகார்களுக்கு மேல் வைத்திருக்க அனுமதிக்கவில்லை என்றும் அவரின் கொலையைத் தொடர்ந்து பதவிக்கு வந்த ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா இத்தடையை அகற்றியதாகவும் தொடர்ந்துகார்கொள்வனவுகள் நடைபெற்றதாக அவ் விசாரணை மேலும் தெரிவித்துள்ளது.

## மின் விநியோகத்தை சீரமைக்க முயற்சி

மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மின்விநியோகத்தை சீரமைப்பதற்கான திட்டம் குறித்து ஆராய விசேட அதிகாரிகள் குழுவொன்றை அமைச்சர் அனுருத்த ரத்வத்த விமானம் மூலம் கொழும்பிற்கு அனுப்பி வைத்துள்ளார்.

கைவிடப்பட்ட 132 கே.வி மின் விநியோகத் திட்டத்தை செயற்படுத்த துரித நடவடிக்கை எடுக்கப்படுகிறது. புனானையிலிருந்து வாழைச்சேனைக்கு இணைப்பு வேலைகளை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியில் தனக்குகிடைத்துள்ள சகலபதவிகளை விட்டெறிந்து விட்டு மீண்டும் சுதந்திரக் கட்சியில் இணைவதற்கு அநுரா பண்டரா நாயக்க தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரிய வருகின்றது.

இது தொடர்பாக சுதந்திரக் கட்சியின் அமைச்சருடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தான் இவ்வாறு வந்தால் இவருக்கு அமைச்சு பதவி கிடைப்பது சாத்தியப்படாது என்றும் எனவே இவருக்கு ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை பிரதி நிதியான பதவி கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதே வேளை இப்போது இப்பதவியை வகிக்கும் நியால் ஜயவிக்கிரம அமெரிக்க தூதுவராக நியமனம் செய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரிய வருகின்றது.

## போட்டிப் பரீட்சை

அரசாங்க மாகாண அரசாங்க கனிஷ்ட சேவையாளர்களை பொது எழுதுவினைஞர் 11 ''ஆ'' பிரிவுக்கும் தட்டெழுத்தாளர் சேவை 11 ''ஆ'' பிரிவுக்கும் நியமிப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளதுஎன யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இப் பரீட்சைகள் இம் மாதம் 30ஆம் திகதியும் அடுத்த மாதம் முதலாம் திகதியும் நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் மேலும் கொழும்பில் இருந்து அறிவித்துள்ளார். (பா),(சி)


உ

## புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் பவ வருடம் ஆவணி மாதம் 30-ந் திகதி வியாழக்கிழமை (15. 9. 94) பகல் 10 மணி முதல் 11. 30 மணி வரையுள்ள உத்தராட நட்சத்திரமும் ஏகாதசி திதி கூடிய சுபவேளையில்

எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும்

★ **கபிலா காலணியகம்** ★

என்னும் நிலையத்தை திறந்து நடாத்த திருவருள் கூடியுள்ளமையினால் அத்தருணம் நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகை தந்து நிலையத்தை சிறப்பிக்குமாறு

அன்புடன் அழைக்கின்றோம்



கபிலா காலணியகம்
இல. 4, சந்தோசம் தெரு,
(கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
நிர்வாகத்தினர்
கபிலா காலணியகம்

(9394)

# இனப்பிரச்சினை தீர்வுக்கு ஆயுத விற்பனையாளரே தடை

## ராவய பத்திரிகை தெரிவிப்பு

(கொழும்பு)

இனப் பிரச்சினையை நுணுக்கமாக அணுகி அதற்கு எதிராக தோன்றும் பாரதூரமான பிரச்சினைகளுக்கு ஈடு கொடுத்து விடக்கூடிய அமைப்பாக பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு இன்னமும் காணப்படவில்லை. இவ்வாறு ராவய சிங்களவார இதழ் அதன் அண்மைய வெளியீட்டில் சுட்டிக் காட்டியுள்ளது அப்பத்திரிகை மேலும் கூறுகையில், அரசாங்கம் இதுவரையில் பலஆணைகளைபிறப்பித்துள்ளது. ஆனால்அவை சரிவர செயற்படுகின்றனவா என்பதை நிர்ணயம் செய்வதிலோ, அல்லதுஅவற்றிற்குஉரியதீர்வை முன்வைப்பதிலோ பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு மேற் கொண்டுள்ளதா என்பது சந்தேகமாகவே உள்ளது.

ஜனாதிபதி பதவி ஐ.தே.கவிடம் இருக்கும் வரை இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக உருப்படியாக எதையும் பொது ஜன ஐக்கிய முன்னணி மேற்கொள்வது கடினமே. அது வரையில் மக்களுக்கு தமது கட்சி மீது நம்பிக்கை பிறக்கக்கூடிய சில விடயங்களை மட்டுமே இவ் அரசினால் செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வருவதில் ஆயுத விற்பனை யாளர்களே முக்கிய தடையாக உள்ளனர். ஆயுத விற்பனையில் ஈடுபட்டுள்ள முக்கிய பிரமுகர்கள் இராணுவ அதிகாரிகளாகவே இருக்கின்றனர்.

இவர்கள் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்த தயாராக இருக்கின்றனர் ஐ.தே.க மற்றும் ஜனதா விமுக்திபெரமுன மக்கள்ஐக்கிய முன்னணி என்பனவும், அரசுக்கு எதிரான சந்தர்ப்பத்திற்காக காத்துள்ளன. இந்த எதிரான சக்திகளை எதிர்கொள்ளும் சக்தி பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு இருப்பதாக தெரியவில்லை என்வும் ராவய சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், இனப் பிரச்சினையின் தீர்விலேயே நாட்டின் எதிர்கால வளர்ச்சி தங்கி இருப்பதாகவும் அப் பத்திரிகை சுட்டிக்காட்டி இருக்கின்றது என்பது குறிப்பிடத் தக்கது.

# சமுத்திரன் குடியிருப்பு புனர்நிர்மாணம்

(தென்மராட்சி)

பச்சிலைப்பள்ளி பகுதியின் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கீழ் இயங்கிவரும் குடியிருப்புத்திட்டங்களான சமுத்திரன் குடியிருப்பு புதிதாக புனரமைக்கப்பட்டு வருகின்றது.

பொந்தன் குடியிருப்புத்திட்டத்தில் புதிதாக 18 குடும்பங்களுக்கு குடிசைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை புலோப்பளையில் அண்மையில் யாழ்தேவி இராணுவ நடவடிக்கையினால் அரசன் நகர்ப் பகுதியில் பாதிப்புற்ற குடும்பங்களுக்கு அமைக்கப்பட்ட குடிசைகளுக்கு மலசலகூட வசதிக்கென 5 மலசல கூடங்களும் தண்ணீர் வசதிக்கெனகுழாய் கிணறுகளும் அமைத்துகொடுக்கப்பட்டுள்ளன தமிழர்புனர்வாழ்வுக்கழகப் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மொத்தமாக 200ற்கும் மேற்பட்ட குடும்பங்களை பராமரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது (86)

# கட்டாக்காலி எருதுகளுக்கு உழவுக்குப் பயிற்சி

மூல்லை மாவட்டம் முத்தையன் கட்டுப்பகுதியில் கட்டாக்காலி மாடுகளை உழவுக்குப் பயன்படுத்தும் செயற்பாட்டில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் ஈடுபட்டுள்ளனர்

கட்டாக்காலிகளாக பயிர்களை நாசம் செய்யும் எருமை மாடுகளைப் பிடித்து பண்ணையில் வைத்து உழவு பழக்கி விவசாயச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கிலேயே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் கீழ் முத்தையன் கட்டுப் பண்ணையில் தற்போது 50 எருமைகளுக்கு இவ்வாறு உழவு பழக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.தே.க. நடவடிக்கை பற்றி நாம் கவலைப்படவில்லை

## இ. தொ. கா. தலைவர் தொண்டமான்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு நாம் ஆதரவளிக்கும் பட்சத்தில் ஐக்கிய தேசியக் கட்சி எம்மீது நடவடிக்கை எடுக்கும் இதைப் பற்றி நாம் கவலைப்படவில்லை. வருவது வரட்டும் என முன்னாள் அமைச்சரும், இ தொ. கா தலைவருமான தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ஹட்டனில் நடைபெற்ற இ. தொ. கா தேசிய சபைக் கூட்டத்தின்பின் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி தேர்தலுக்கு, வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் எமது மக்களின் அபிப்பிராயத்தை அறிய இ. தொ கா தேசிய சபையை கூட்டி யாருக்கு ஆதரவளிப்பது என முடிவெடுக்க உள்ளோம். சூழ்நிலைக்கேற்பநடவடிக்கையை மேற்கொள்ள தேசிய சபை தலைவருக்கு அதிகாரமளித்துள்ளது இது தொடர்பான தீர்மானத்தை தேசிய சபை ஒத்துக்கொண்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

### பிரதி பொலிஸ்மா அதிபர் விவகாரம்

# வடமத்திய மாகாண முடிவு ஜனாதிபதி எதிர்ப்பு

(கொழும்பு)

வடமத்திய மாகாணத்தின் பிரதிப் பொலிஸ்மா அதிபரை மேற்படி மாகாண சபையின் முதலமைச்சர் மகிந்தசோமா கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதென வடமத்திய மாகாண சபை அமைச்சரவை எடுத்தமுடிவு அரசியலமைப்பிற்கும் சட்டத்திற்கும் முரணானது என்று ஜனாதிபதி டி பி. விஜேதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் கே. ஜே விஜேதாச மூலமாக முதலமைச்சர் மகிந்தசோமாவிற்கு ஜனாதிபதி மேற் கண்டவாறு அறிவித்துள்ளார்,

பதில் சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில்ஜனாதிபதி இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார். வடமத்திய மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு முதலமைச்சர் மகிந்த சோமா விடுத்திருக்கும் உத்தரவு அவரது கட்சிக்கும் அதிகாரத்திற்கும் அப்பாற்பட்டது எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# நியமனம் கோரிஉறுப்பினர் உண்ணாவிரத போராட்டம்

(கொழும்பு)

தென் மாகாண சபை உறுப்பினர் பதவி தனக்கு வழங்கப்படா விட்டால், உயிரை மாய்த்துக் கொள்வதாக அறிவித்து பொது ஜன ஐக்கிய முன்னணி உறுப்பினா ஒருவர் உண்ணாவிரதப்போராட்டத்தில் குதித்துள்ளார்.

தென் மாகாண சபையில் தற்போது வெற்றிடமாகியிருக்கும் உறுப்பினர் பதவி ஒன்றுக்கு, கட்சி மாறி வந்த உறுப்பினர் ஒருவரை நியமிக்க கட்சி மேலிடம் முடிவெடுத்திருப்பதை எதிர்த்தும், தனக்கே அப்பதவி வழங்கப்படவேண்டும் எனத் தெரிவித்தும் உண்ணாவிரதத்தை ஆர். சிறிசேன என்ற பொ. ஜ. ஐ. மு. உறுப்பினரே உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளவராவார்.

## 3ஆம் ஆண்டு நினைவாக



**வீரவேங்கை பரந்தாமன்**

(அருளானந்தம் அமிர்தராஜ்)

(பாடசாலை வீதி, தாவடி)

| மலர்வு | வீரச்சாவு |
|---|---|
| 14 - 01 - 1976 | 15 09 - 1991 |

அரும்புகளாம் இளம்புலியில் ஆயிரவர்
அர்ப்பணிப்பில் இரும்பனைய
இனவெறியர் இதயங்கள் நொறுக்கிய போர்
படைத்துவரும் வெற்றிகளின்
படிக்கல்லாய் - மணலாற்றுப் படைக்குள்
ஒரு பாய்புலியாய்ப் பரந்தாமா
விண் சென்றாய்! நடக்கின்ற
தர்மப்போர் நண்ணுமோர் நாள்
வெற்றியெனத் துடிக்கின்றாய்
நம்நரம்பில் தொழுகின்றோம்

- குடும்பத்தினர்

((9384)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



# 12 நாடுகளிலிருந்து ஐ.தே.க. ஆயுத இறக்குமதி

(கொழும்பு)

கொள்வனவு செய்ததாகக் ... அவுஸ்ரேலியா, யப்பான் ...

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி





பிறப்பு 3-5-1976 — வீரச்சாவு 15-9-1991

## வீரவேங்கை ஜெகன்
(ஜெயநாதன் ஜெறோம்)

மக்களது சுதந்திரத்துக்காகவும்
மகிழ்ச்சிக்காகவும் உனது உயிரைக்
கொடுத்து முடிவற்ற புகழைப்
பெற்றுக் கொண்டாய்.

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீர அஞ்சலிகள்.

25, மடம் வீதி,
யாழ்ப்பாணம்.

உன் நினைவில்
அம்மா, அப்பா, அண்ணா
[9313]

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்:
03-02-1963

தமிழீழ மண்ணில்:
15-09 1989

### கப்டன் அக்காச்சி (ஜெகன்)
(சிவகுருநாதன் ஸ்ரீகாந்தன் நீர்வேலி)

தமிழினம் வாழத்தன்னுயிர் கொடுத்த
தமிழ்மகனே! எங்கள் தன்மான வீரனே!
நீயெமைப் பிரிந்தின்று ஆண்டுகள் ஐந்தா?
உன் நினைவுகள் இங்கே ஆயிரமன்றோ.

உன்நினைவுடன் வாழும்
அக்காச்சி எழுச்சிக்குடியிருப்பு
மக்கள்

அக்காச்சி எழுச்சிக்குடியிருப்பு,
வாதரவத்தை,
புத்தூர். (9389)

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதற்காக முன்னைய ஐ.தே.க அரசு பன்னிரண்டு நாடுகளிலிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்ததாகக் கூறப்படுகிறது. இஸ்ரேல், செக்கோசெலவாக்கிய, தென் ஆபிரிக்கா, சீனா, ரஷ்யா, இந்தியா, பிரிட்டன், அமெரிக்கா, ஆர்ஜென்ரீனா, இத்தாலி, அவுஸ்ரேலியா, யப்பான் ஆகிய நாடுகளிலிருந்து இவ் ஆயுதக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது 1983-ம் ஆண்டு முதல் பல கோடிரூபா முதலீட்டில் இவ் ஆயுதக் கொள்வனவு இடம்பெற்றதும், இதனால் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பு நேரிட்டதாகவும் கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டு இருக்கிறது.

## கடும் வரட்சியினால் இணற்றில் நீரில்லை

யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து ஏற்பட்டுவரும் கடும் வரட்சி காரணமாக ஈச்சமோட்டை, சுண்டிக்குளி பகுதியில் உள்ள பொதுமக்கள் பாவிக்கும்கிணறுகளில் உள்ள நீர் வற்றி உள்ளது இதன் காரணமாக இம்மக்களில் ஆண்கள் குளிப்பதற்காக தற்போது கடற்கரையோரங்களையே நாடிச்செல்கிறார்கள் என அறியப்படுகிறது. இத்தகைய நிலை முன்னர் ஒரு போதும் ஏற்படவில்லை என இப்பகுதி வாசிகள் தெரிவிக்கின்றனர். (17)

## மனைவியை தாக்கியவரை மைத்துனர் வெட்டினார்

(யாழ்ப்பாணம்)

மனைவி பிழை செய்தார் என மனைவியை தாக்கியவர் மைத்துனரினால் வெட்டப்பட்டு காயத்துக்குள்ளானார்.

இராசலிங்கம் வீதி திருநகரில் நடந்த இச்சம்பவத்தின் போது அதே இடத்தைச் சேர்ந்த அந்தோனி சகாயம் (வயது 30) என்பவரே மைத்துனரினால் கத்தியால் வெட்டப்பட்டவராவார்.

வேலை முடிந்து வீட்டுக்கு போன சமயம் சோற்றுப் பானையை நாய் இழுத்து தின்று கொண்டிருந்ததாகவும் பிள்ளையை அம்மா எங்கே என்று விசாரித்த போது அவர் பக்கத்து வீட்டில் கதைத்துக்கொண்டிருப்பதாக பிள்ளை சொல்லவே தான் அங்கு சென்று மனைவியை அழைத்து வந்து பேசி விட்டு அடித்ததாகவும் வெட்டுக் காயத்திற்கு இலக்காகிய இவர் தெரிவித்தார். (சி)

## கருத்தரங்கு

அதிபர் கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர் தேர்வுக்கு ஆயத்தப்படுத்தும் முகமாக யாழ். முறைசாராக் கல்விப் போதனாசிரியர் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்படும் கருத்தரங்கு எதிர்வரும் 17,18-ம் திகதி சனி, ஞாயிறு காலை 9.00 மணி முதல் 4.30 மணிவரை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே பதிவு செய்தவர்கள் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி அவர்கள் ஆரம்பித்து வைப்பார்கள்.

## நூல் அன்பளிப்பு

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளின் போது கடந்த 1993 ஆம் வருடம் கிளாலிக் கடலில் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட செல்வி ஜெயந்தி - கதிரமலையின் நினைவாக அச்சுவேலி பொது நூல் நிலையத்திற்கு பல நூல்கள் அன்பளிப்பாக அண்மையில்வழங்கப்பட்டன

## 40 லட்சத்திற்கு விற்பனை

முன்னாள் உயர்கல்வி அமைச்சராக இருந்த அநுரா பாவித்த எண்பது லட்சம் பெறுமதியுடைய உத்தியோக பூர்வமான வாகனத்தை நாற்பது லட்சம் ரூபாவுக்கு ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## பிரதிப் பணிப்பாளர் விண்ணப்பம்

(பருத்தித்துறை)

இலங்கை விஞ்ஞான சேவைகளச்சபை காட்டு சீவராசிகள் காப்பு திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர்கள் பதவிகளுக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

தாவரவியல், உயிரியல், விலங்கியல் பாடங்களில் பல்கலைக்கழகத்தில் விசேட பட்டம் பெற்றவர்கள் அல்லது விவசாயம் தொடர்பான பல்கலைக் கழகத்தின் விசேட பட்டம் அல்லது குறிப்பிட்ட தொழில் நுட்ப பிரிவில் எட்டு வருடத்திற்குக் குறையாத காலத்துக்கு பதவி நிலை உத்தியோகத்தராக அனுபவம் பெற்றிருப்பவர்களும் 20-09-94 க்கு முன் விண்ணப்பிக்கலாமென இலங்கை விஞ்ஞான சேவைகள் சபைச் செயலாளர் திரு. தி. டபிள்யூ. சத்தியபால அறிவித்துள்ளார். இது பற்றிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல் புலோலி பொது நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. (25)



### பரமசாமி சிறிஜெயன் (வீடியோ சிறி)
(தமிழீழ விடுதலைப் புலிகளின் கனடாக் கிளை உறுப்பினர்)

தாய் மடியில் 15-07-1964 — தமிழ் மடியில் 26-08-1993

திதி - 15-09-94

மாண்புறு மட்டுவில் மாசறு பதியில்
தோன்புறு தமிழ் துலாம்பரத் தீபமாய்
பண்புறு பரமசாமி பாரிய குடும்பம்
கண்படக் கூடிய கலைக்கோயில் கூடம் இதில்
சீருறத் தோன்றிய சீராளன் சிறி ஜெயன்
வானம் பாடியில் பல வாழ்த்துடன் பாடி- கனடாவில்
வானுறத் திகழ்ந்த ''வீடியோ'' கலைஞன்
வேருறு விடுதலைப் புலிகளில் ஒன்றாய்
ஊணுறக்கமின்றி உலகத்தமிழருக் குழைத்தவன்
இல்லறம் புக்கா உண்மையின் காவலன்
ஏனிவன் இப்படி இவ்வளவு சீக்கிரம் இறையடி
எய்தினான்!
வானிவன் வரலாற்றினை வாழ்த்தியே நிற்குமிவ்
வீடியோ சிறியின் ஆன்மா சாந்தியுற இறைவனை
இறைஞ்சுவோம்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி,

- குடும்பத்தினர்
(9383)

[library stamp]

**சிந்தனைக்கு..**

அச்சத்தை அடிப்படையாகக் கொண்ட சமாதானம் அடக்கி வைக்கப்பட்ட போர் அன்றி வேறில்லை.

- ஹென்றியன் எரக்;


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 15 09 1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024

தபால்பெட்டி எண் 05


## தப்பான கணிப்பு

நேற்று முன்தினம் இரவு பி.பி.ஸியில் ஒலிபரப்பான பேட்டியில், இனப்பிரச்சினையில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு உட்பட, பல்வேறு விடயங்களுக்கும் தெளிவான பதிலை தலைவர் பிரபாகரன் அளித்துள்ளார். இந்தவகையில் இனி எவரும் இனப்பிரச்சினையில் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு குறித்த சந்தேகமோ, ஐயமோ இனிக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்றே கூறலாம்.

இப்பேட்டியில் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வொன்று காணப்படுவதற்கு விடுதலைப்புலிகள் இயக்கம் தயாராக இருக்கின்றது என்பது தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதோடு, பேச்சுவார்த்தை ஒன்று நடத்தப்பட்டு அது வெற்றியளிக்க வேண்டுமானால் போர் நிறுத்தம் ஒன்று அவசியம் என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை இப்போர் நிறுத்தமானது ஒரு நிபந்தனையல்ல என்பதையும் தலைவர் பிரபாகரன் தெளிவாகவே விளக்கியுள்ளார். சமாதானப் பேச்சிற்கான ஒரு சமாதான சூழ்நிலை அவசியமென்ற அவரது நிலைப்பாடானது யதார்த்தத்தின் பாற்பட்டது; ஒருபுறம் யுத்தம், மறுபுறம் சமாதானப் பேச்சுக்கள் என்பது சமாதானம் நோக்கி இட்டுச் செல்லாது என்பதோடு ஒருவகையில் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதற்கான ஒன்றாகவே இருக்கும் என்பதிலும் ஐயமில்லை.

இதேவேளை யுத்தநிறுத்தம் என்பது பலவீனப்பட்டுள்ள புலிகளை பலப்படுத்திவிடும் என்ற இராணுவத் தரப்பு வாதமானது ஏற்புடையதல்ல என்பதையும், விடுதலைப்புலிகளின் போர் யுத்திக்கு முரணானது என்பதையும் தலைவர் பிரபாகரன் தெளிவுபடுத்தியுள்ளார். 'இராணுவ ரீதியில் போர்நிறுத்தம் எமக்குச் சாதகமானதல்ல. எதிரியின் ஆயுதங்களைப் பறிப்பதிலும், அழிப்பதிலும் தான் எமது வளர்ச்சியும் பலமும் தங்கியுள்ளது. போர் நடவடிக்கையின் மூலமே இது சாத்தியமாகின்றது' என்ற தலைவர் பிரபாகரனின் கூற்றானது, கடந்த கால வரலாற்றின் வெளிப்பாடே ஆகும்.

எடுத்துக்காட்டாக 1991இல் ஆனையிறவுச் சமர் ஆ.க.வெ. நடவடிக்கை - முடிவடைந்த வேளை விடுதலைப்புலிகள் இயக்கம் பெரிதும் பலவீனப்பட்டுப் போய்

# மக்களின் அவலவாழ்வு நீங்க தன்னை உருக்கிய தியாகி திலீபன்

## மாவீரர்பணிமனை அறிக்கை

தமிழ் பேசும் மக்கள் அவல வாழ்வு வாழக் கூடாது என்பதற்காக தன்னையே உருக்கிய தியாகச் சுடரை இன்று முதல் 26 ஆம் திகதி வரை நாம் நினைவு கூர்ந்து அஞ்சலி செய்வோம் இவ்வாறு தியாகி லெப். கேணல் திலீபனின் 7 ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு யாழ்மாவட்ட மாவீரர் பணிமனை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையின் விபரம் வருமாறு; திலீபன் ஒரு யுக புருசன்! ஈழ மண்ணில் முழங்கிய ஒரு புரட்சி இடி! அதன் எதிரொலி இன்று உலகெங்கும் எதிரொலிக்கின்றது.

ஓர் உயர்ந்த இலட்சியத்திற்காக உண்ணாநோன்பிருந்து, நோன்பிருந்த நேரம் தொட்டு ஈகச்சாவைத் தழுவிக் கொள்ளும் வரை ஒரு துளி நீர் கூட அருந்தாமல் மறைந்த அந்தக் கர்மயோகியின் உறுதியையும், வீரத்தையும் உலக சாதனைப் புத்தகங்களும், வரலாற்றுச் சுவடிகளும் பதிவு செய்து கொண்டிருக்கின்றன.

நாம் ஒரு இந்திய இராணுவ சிப்பாய்க்கு எதிராகத் துப்பாக்கியைத் தூக்கினால் இந்திய மக்களின் மனம் புண்பட்டுவிடும் என்பதற்காக திலீபன் இந்திய அரசுடன் அகிம்சையில் பேசினான்.

அசுர வல்லமை படைத்த இந்திய அரசு ஈழப் பிரச்சினையில் நேரடியாகவும், வெளிப்படையாகவும் தலையிட்ட போது அதனை எதிர்த்து இந்தியாவின் கபட வஞ்சக நோக்கத்தை அம்பலப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. காந்தியையும் காந்தி பிறந்த நாட்டையும் ஒன்றாகவே பார்த்த மக்களுக்கு காந்தி பிறந்த இன்றைய பாரதம் தனது பிராந்திய வல்லாதிக்கத் தன்மையை நிலைநிறுத்தும் நோக்கில் எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் வஞ்சகமும், சூதும் கொண்ட அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டது என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டவும் எமது இளைஞர்கள் சிங்கள ஆக்கிரமிப்பாளரின் சித்திரவதை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதைக் கண்டும், அவன் தனது ஆக்கிரமிப்புக் கரத்தை இறுக்கும் நோக்கில் தனது பொலிஸ் நிலையங்களைத் திறக்கவும், புனர்வாழ்வு என்ற போர்வையில் எமது தமிழீழ மண்ணில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவ முயற்சிப்பதையும். இவற்றிற்கு பாரதம் துணை போவதையும், எம்மண்ணில் உள்ள பாடசாலைகள், கோவில்களில் இராணுவம் இருந்து அனர்த்தம் புரிவதையும் எம் தேச மக்களைக் கொன்றொழிக்க தேசத் துரோகிகளிற்கு கொடுக்கப்பட்ட ஆயுதங்களை மீளப் பெறவும் கோரி ஐந்து அம்சக் கோரிக்கையை முன் வைத்து 15-09-87 தொடக்கம் 26 09 .87 வரை நீரருந்தாது உண்ணா நோன்பை நோற்று எந்தவொரு கோரிக்கையும் நிறைவேற்றப்படாத நிலையிலேயே 26 09. 87 அன்று ஈகச்சாவைத் தழுவிக் கொண்டான்.

தமிழ் பேசும் மக்கள் ஓர் அவல வாழ்வு வாழக் கூடாது என்பதற்காக தன்னையே மெழுகுவர்த்தியாக உருக்கிய தியாகச் சுடரை நினைவு கொள்ளும் இந் நாட்களில் (15-09-1994 26 09-1994) வரை வீதியெங்கும் அலங்கரித்து வீடுகள் தோறும் பந்தலிட்டு அவனது உருவப் படம் வைத்து விளக்கேற்றி, மலர் வைத்து, மாலை சூட்டி, திலீபன் நினைவாக நடைபெறும் சிரமதானங்களில் கலந்து கொண்டு சிறப்பித்து இந்நாட்களில் வட்டரீதியாக நடைபெறும் உண்ணாவிரத நிகழ்வுகளிலும் கலை நிகழ்ச்சிகளிலும், எழுச்சியுடன் பங்கெடுத்து இறுதி நாளில் கோட்டரீதியாக நடைபெறும் உண்ணாவிரத நிகழ்ச்சியிலும் நினைவு வீரவணக்கக் கூட்டத்திலும் அனைவரும் அணிதிரண்டு.

"எம் மக்கள் அனைவரும் எழுச்சியுடைவர்களாயின் தமிழீழம் உருவாவதை யாராலும் தடுக்க முடியாது" என்ற அவனது கூற்றை மெய்ப்பித்து நின்று அவனது இலட்சியத்தை நிறைவேற்றுவோம்.

# வரலாற்றில் திருப்பம் ஏற்படுத்திய தியாகி திலீபனின் தற்கொடை

## விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு

லெப். கேணல் திலீபனின் தியாகம் விடுதலைப் போராட்ட வரலாற்றில் மாபெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. எமது வரலாற்று எதிரியான சிறிலங்கா நாட்டுக்கு அடுத்ததாக எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு எண்ணிய இன்னொரு சக்தியான இந்திய அரசுக்கு பாடம் புகட்டிய ஓர் போர் வடிவம். இதனால் உலகத்திலே இந்திய அரசின் முகமூடி கிழித்தெறியப்பட்டு உண்மை நிலை வெளிக்கொண்டு வரப்பட்டதற்கு திலீபன் கொடுத்த இந்தப் போர் வடிவம் மிகவும் முக்கியமானதொன்றாக அமைந்தது. இவ்வாறு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை திசை திருப்பவும், நசுக்கவும் திட்டமிட்டு எமது மண்ணில் கால் பதித்த இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக அமைந்த திலீபனின் போர் வடிவத்தால் இந்திய அரசு தலைகுனிந்தது. மாணவன் என்ற நிலையில் இருந்து காலத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு தேசிய விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொண்ட திலீபன் எமது தேசிய தலைவரின் சிந்தனைகளை மக்கள் மத்தியிலும், மாணவர்கள் மத்தியிலும் விதைப்பதில் தீவிரமாக செயற்பட்டான். இவ்வாறான போராளியின் இத்தியாகமானது மாணவ சமுதாயத்திற்கு முன்னுதாரணமாகத் திகழ்கின்றது.

திலீபனின் 7-ம் ஆண்டு நினைவு நாள் நினைவு கூரப்படும் வேளையில் எமது மண்ணில் கால் பதித்த இந்தியஆக்கிரமிப்புப்படை அகற்றப்பட்டும், எமது வரலாற்று எதிரியான சிங்கள ஆக்கிரமிப்பு படை முகாம்கள் பலவும் தகர்க்கப்பட்டும் எமது தமிழீழ தாய்நாட்டின் தனியரசு உருவாக்கப்பட்டும் வருகின்றது. தாய்நாட்டின் விடுதலைக்காக தன்னுயிர் ஈந்த திலீபனின் நினைவு நாட்களில் தமிழீழ மாணவர்கள் உணர்வு பூர்வமாக நினைவு நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இன்று தொடக்கம் 25 09 1994-ம் நாள் வரையிலான நினைவு நாள் காலப் பகுதியில் மாணவர்கள் பாடசாலையில் காலையில் திலீபனின் உருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலிசெலுத்தி 30 நிமிட நேர நினைவு நிகழ்வுகளை ஒவ்வொரு நாளும் நடத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம் மேற்படி பதினொரு நாட்களில் ஒரு நாளில் வசதியைப் பொறுத்து காலையில் ஆரம்பித்து பாடசாலையில் முழுநேர நினைவு நிகழ்வுகளை நடத்துமாறும் பாடசாலைகளில் சிரமதான வைபவங்களையும் பாடசாலை அமைந்துள்ள வட்டத்தில் குறிக்கப்பட்ட ஒரு இடத்தில் நடத்தப்படுகின்ற அடையாள உண்ணாவிரதத்தில் ஒரு நாள் பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்ளுமாறும். இறுதி நாளான 26-09-1994-ம்நாள் கோட்ட மட்டத்தில் நடத்தப்படுகின்ற நினைவு நாள் நிகழ்வுகளில் மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளுகின்றோம். என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தியாகி திலீபன் நினைவாக

# அரச ஊழியர் சம்பளத்திலிருந்து

## சிறுவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

மரத்தில் இருந்து தவறி மின்சாரக் கம்பி மீது வீழ்ந்த சிறுவன், கம்பி கழுத்தை வெட்டியதால் மரணமானார்.

கற்கோவளம் பருத்தித்துறையைச் சேர்ந்த அம்பிகாபதி கமலராஜன் (வயது 14) என்பவரே இவ்வாறு பலியானவர் ஆவார்.

மேற்படி சிறுவன் மரத்தில் ஏறி விளையாடிய போது தவறி வீழ்ந்த சமயம் மின் கம்பிகளுக்குள் தலை சிக்குண்டதாகவும் இதனால் கழுத்தில் வெட்டுக்காயத்துக்குள்ளானார் எனவும், பின்னர் அந்தக் கம்பிகளுக்குள்ளிருந்தும் நிலத்தில் வீழ்ந்தார் எனவும் தெரியவருகின்றது. (சி)

## சம்பளம் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

பட்டதாரி பயிலுநர்களிற்கான சம்பளம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டில் திட்ட அமுலாக்கல் அமைச்சினால் பட்டதாரி பயிலுநர் நியமனங்கள் அண்மையில் வழங்கப்பட்டிருந்தது.

இவர்களிற்கான சம்பளம் மாதாந்தம் இரண்டாயிரத்து ஐநூறு ரூபா வீதம் மேற்படி அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (88, நி.தி)

## இலக்க தகடு விநியோகம்

(தெல்புரம்)

வலிமேற்கு பிரதேச சபையினரால் மாட்டு வண்டில், வளர்ப்பு நாய்கள், துவிச்சக்கர வண்டிகள் என்பனவற்றிற்கான 1994 ஆம் ஆண்டிற்குரிய இலக்கத் தகடுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

மேற்படி உரிமை இலக்கத்தகடுகளை, அராலி, வட்டுக்கோட்டை, சங்கானை, சுழிபுரம் உபஅலுவலகங்களில் காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் என வலிமேற்கு பிரதேச சபைச் செயலாளர் திரு. க. திரவியம் தெரிவித்துள்ளார். (41)

## கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் இரண்டு (என்-தேவநாயகம் என்பவருடையது) உரும்பிராய்ச் சந்தியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது காற்சட்டை துணி ஒன்றும் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக் கொள்ளவும்.

லைப்புலிகள் இயக்கம் பெரிதும் பலவீனப்பட்டுப் போய் விட்டது. போராடும் சக்தியையே இழந்துவிட்டது என்றே சிறிலங்கா இராணுவத்தரப்பு மற்றும் சிங்கள இராணுவ விமர்சகர்களும் தெரிவித்தனர். இதனால் அதற்குப்பிற்பட்ட காலத்தில் யுத்த நிறுத்தம் ஒன்றைச் செய்யவும் மறுத்தனர்.

ஆனால் நடந்தவையெல்லாம் தலைகீழான மாற்றத்துடன் கூடியவை. இச்சமரின் பின்னரே சிறிலங்கா இராணுவத்திற்கு உயிர் மற்றும் உடைமைகளில் பாரிய சேதங்களை ஏற்படுத்திய தாக்குதல்களை விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர். கட்டைக்காட்டு மினிமுகாம் தகர்ப்பு, மண்கிண்டிமலை ராணுவ முகாம் தகர்ப்பு, ஒப்பரேசன் யாழ் தேவி ராணுவ நடவடிக்கை முறியடிப்பு, பூநகரி கூட்டுப்படைத்தளம் மீதான தாக்குதல் என்பனவற்றோடு கடற்புலிகளும் பெரும் சாதனை படைத்தது இக்காலகட்டத்தின் பின்புதான்.

இந்நிலையில் யுத்த நிறுத்தம் என்பது புலிகளைப் பலப்படுத்தும் என்ற இராணுவத்தரப்பு வாதம் வரலாற்றிற்குப் புறம்பானதாகும். மறுபாடாக யுத்தநிறுத்தம் இராணுவத்தரப் பிற்கே சாதகமான சூழ்நிலையைத் தோற்றுவிக்கக் கூடும். கடந்த வருடம் பூநகரி கூட்டுப்படைத்தளம் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலினால் நிலைகுலைந்து போன சிறிலங்கா இராணுவக்கட்டமைப்பு இன்னமும் ஒழுங்கான முறையில் சீரமைக்கப்படவில்லை என்றே தெரிகின்றது. அவ்வாறு ஒழுங்கமைக்கப்படாமையே அத்தாக்குதல் இடம் பெற்று ஒன்பது மாதங்கள் கழிந்தும் கூட இராணுவம் ஒரு பெரும் தாக்குதலை நடத்த முடியாமல் போய்விட்டது. இந்த வகையில் யுத்த நிறுத்தம் ஒன்றுஏற்படுமானால் அதன் மூலம் கிடைக்கும் கால அவகாசம் இராணுவத்தைச் சீரமைக்கவும், ஒழுங்குபடுத்தவுமே உதவக் கூடும்.

இராணுவத் தரப்பு யுத்தநிறுத்தம் தேவையற்றது என வற்புறுத்துவதற்கு வேறு காரணங்கள் இருக்கலாம். இதற்கு விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியில் வெற்றிகொள்ள முடியவில்லையே என்ற ஆதங்கமும், யுத்தத்தினால் கிட்டும் பெருமளவிலான பொருளாதாரமும் முக்கியமானவையாக இருக்கலாம்.

ஆனால் இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு காண்பதாகப் புறப்பட்டு விட்ட அரசியல்வாதிகள் இதனை ஏற்றுக் கொண்டு கடந்த கால வரலாற்றையும், நிகழ்கால யதார்த்தத்தையும் மறப்பதன் மூலமும், சமாதானம் நோக்கி முன்னேறி விட முடியாது. போர் நிறுத்தம் ஒன்று ஏற்படாதுவிட்டால் உண்மையான சமாதான சூழ்நிலையும் சுதந்திரமான சமாதானப் பேச்சுக்களும் இடம்பெறாது என்பது வெளிப்படை.

## நாற்று வழங்கும் விழா

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன தென்மராட்சி கோட்டத்தால் தியாகி திலீபனின் 7-ம் ஆண்டு நினைவை முன்னிட்டு பளை வட்டத்தில் உள்ள புலோப்பளை கிராமத்தில் 100 குடும்பங்களுக்கு நல்லின தென்னம் நாற்றுக்கள் வழங்கப்படவுள்ளது.

இந் நாற்று வழங்கும் வைபவ விழா இன்று பிற்பகல் 2.00 மணிக்கு புலோப்பளையில் உள்ள கல்விக் கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிராமிய உற்பத்திக் குழு மூலம் தெரிவு செய்யப்பட்ட இக் குடும்பங்களுக்கு கிராம மேம்பாட்டு திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்பட்ட நல்லின தென்னம் நாற்றுக்களே வழங்கப்படவுள்ளன.

## கொழும்பில் 7 மாதம் தேங்கிக் கிடந்த

# பல்கலைக்கழகப்பொருள்கள் யாழ் வந்து சேர்ந்தன

[யாழ்ப்பாணம்]

கொழும்பில் யாழ் பல்கலைக்கழகத்திற்கென தேங்கிக் கிடந்த பொருட்கள் ஏழு மாதங்களுக்குப் பின்பு யாழ் பல்கலைக்கழகம் வந்துசேர்ந்துள்ளன.

கப்பல் வசதியீனம் மற்றும் சில இடையூறுகளினால் இப்பொருட்கள் கொழும்பு துறைமுகத்தில் சுமார் ஏழு மாதமாக தேங்கிக் கிடந்தன.

இப்பொருட்கள் 'குமாரி', 'மாகோ' ஆகிய கப்பல்களின் மூலமே எடுத்துவரப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

# பொது நூலகங்களுக்கு புதிய நூல்கள் கொள்வனவு

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேச சபையினரால் நடத்தப்படும் பொது நூலகங்களில் படிப்போர் நன்மை கருதி பல பெறுமதி வாய்ந்த நூல்கள்கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அத்தோடு இதுவரைகாலமும் ஏற்பட்டிருந்த பொது நூலக தளபாடப்பற்றாக்குறையும் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன.

சுழிபுரம், சங்கானை, வட்டுக்கோட்டை, அராலி உப அலுவலகங்களின் பொது நூலகங்களுக்கான நூல்கள், தளபாடங்கள் அதிகரிக்கப்பட்டதனை அடுத்து மேற்படி நூலகங்களில் படிப்போர் தொகையும் அதிகரித்து காணப்படுகின்றன. அத்தோடுமேற்படி பகுதிகளில் இடம்பெயர்ந்தோர் முகாம்களும் கூடிய அளவில் காணப்படுவதால் அங்கு வாழும் மக்களுக்கும் கல்வி வாய்ப்பும் படிக்கும் தன்மையும் அதிகரிக்க வாய்ப்பு எட்டியுள்ளது. (41)

## துவிச்சக்கரவண்டி விலை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் துவிச்சக்கரவண்டிகளின் விலைகள் வெகுவாக குறைந்துள்ளது. அத்துடன் துவிச்சக்கர வண்டியின் உதிரிப் பாகங்களும் விலை குறைந்துள்ளதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. (88, நி)

# விளையாட்டு வீரருக்கு போஷாக்கு

விளையாட்டு வீரர்களுக்கு போஷாக்கு உணவுகளை வழங்கவும் விளையாட்டு கழகங்களையும் உருவாக்கும் முகமாக தேவையான நிதியினை அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து அறவிட அரசு தீர்மானித்துள்ளது.

இது பற்றி தெரியவருவதாவது;

விளையாட்டு வீரர்களின் போஷாக்கு ஊக்குவிக்கப்படவுள்ளதுடன் அவர்கள் போஷாக்கு உணவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக 500 ரூபா வீதம் போஷாக்கு அலவன்ஸ் வழங்கப்படவுள்ளதாக இளைஞர் விவகார விளையாட்டு அமைச்சர் திரு எஸ். பீ. திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

இது தவிர ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலும் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களை உருவாக்கவும் உத்தேசித்துள்ளதாகவும் இதற்கென சகல அரச, தனியார்துறை ஊழியர்களின் சம்பளத்திலிருந்து மாதாந்தம் ஒரு ரூபா வீதம் அறவிடும் நிதியம் ஒன்றையும் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வன்னிப் பிரதேசத்தில் மாணவர் எழுச்சிப் பாசறை

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினரால் மாணவர் எழுச்சிப் பாசறை வன்னி மாவட்டத்தில் விசுவமடு என்னுமிடத்தில் 1-9-94-ம் நாள் தொடக்கம் 4-9-94-ம் நாள் வரை நடத்தப்பட்டது.

இவ் எழுச்சிப் பாசறையில் வன்னி மாவட்டத்தில் இருந்து 80 மாணவர்களும் யாழ், மன்னார், முல்லை மாவட்டங்களில் இருந்து தலா 10 மாணவர்களும் கலந்துகொண்டனர்.

மாணவர்களின் தனி ஆளுமையை விருத்தி செய்யவும், மாணவர்கள் சமூகத்துக்கு உரியவர்களாக மாற்றப்படவும், சொந்தக் காலில் நின்று செயற்படவும் ஏதுவாக இப் பாசறை நிகழ்வுகள் அமைந்தன. மாணவர்கள் ஆர்வத்துடன் செயற்பட்டதை இறுதி நாள் நிகழ்வுகள் வெளிக்காட்டக்கூடியதாக இருந்தது.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் சகல கோட்ட, மாவட்ட, தமிழீழ பொறுப்பாளர்களும் இப்பாசறையில் கலந்து கொண்டனர். இப்பாசறை மாவட்ட ரீதியாக தொடர்ந்து நடத்தப்படவிருக்கின்றது.

மாணவர் எழுச்சிப் பாசறையின் ஆரம்ப நிகழ்வில் தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு கரிகாலன், கிளை நடுவப்பணியக பொறுப்பாளர் திரு எழிலரசன், வன்னி, முல்லை, மன்னார் மாவட்ட தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. நாவண்ணன். வன்னி மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் திரு. ஞானம், வன்னி மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. செல்வம், வன்னி மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு. ஜெனி, கிளி கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு பரணிதரன், விடுதலைப் புலிகள் மகளிர் அணியினர், கண்டாவளைக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு குருகுலராஜா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொன் சபாபதி ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994-09-15**

**வியாழன் இரவு**

08-01 - தியாக தீபம் லெப்ரினன்ட் கேணல் திலீபனின் 7-ம் ஆண்டுநினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''திலீபனின் தியாகம்''

08-20 உழைப்போம் உயர்வோம் - நிகழ்ச்சியில் மாக்கைத் தொழில் உரைச் சித்திரம்

08-30 - செய்திகள்

08-40 - ஏட்டிலிருந்து - நேதாஜியின்வீரப் போர் என்ற நூலிலிருந்து ''நெடுங்கடலில் நேதாஜி'' எனும் கட்டுரையின் சில பகுதிகள்

08-50 - மலரும் மொட்டுக்கள்

**1994 09.16**

**வெள்ளி காலை**

07-02 - மாவீரவணக்கம்

07-15 - மணியாரம்

07-30 - செய்திகள்

07-35 - பத்திரிகைச் செய்திகள்

07-40 - தியாக தீபம் லெப்ரினன்ட் கேணல் திலீபனின் 7ம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி 'பசிப்போரில் பன்னிருநாட்கள்'

# 7500 தமிழ் அகதிகள் தமிழ்நாட்டிலிருந்து வருவர்

(சென்னை)

தமிழ் நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பும் நடவடிக்கை எதிர் வரும் திங்கட்கிழமை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது. நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய மாநில வருவாய்த்துறை ஆணையாளரும், அகதிகள் மறுவாழ்வு ஒருங்கிணைப்பு அதிகாரியுமான என் ரகுபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் இலங்கையில் வடக்கு-கிழக்கு பகுதி உட்பட அரசியல் சூழ்நிலையில் முன்னேற்றம் காணப்பட்டிருப்பதை யடுத்து இம்முடிவு எடுக்கப்பட்டதாகவும், இந்தியாவில் தற்போது தங்கியுள்ள 69,000 இலங்கை தமிழ் அகதிகளில் சுமார் 7500 பேர் இலங்கைக்குத் திரும்பிச் செல்ல விருப்பம் தெரிவித்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் அகதிகள் பயணம் செய்யும் கப்பலுக்கு சர்வதேச கடல் எல்லைவரை இந்திய கடலோர காவற்படை பாதுகாப்பு வழங்கும் எனவும் அதன் பின்னர் சிறிலங்கா கடற்படையின் பாதுகாப்புடன் கப்பல் திருகோணமலை துறைமுகத்தை அடையும் எனவும் தெரி த்தார்.

சிறிலங்கா அரசு, இந்திய அரசு, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் என்பவற்றுக்கு இடையிலான முத்தரப்பு உடன்பாட்டின் அடிப்படையில் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

## சமுகம் தர கோரிக்கை

யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமாப் பயிற்சி நெறி பகுதி 1 இனான யாழ் இந்து மகளிர் கல்லூரியில் பூர்த்தி செய்த மாணவர்கள் அனைவரையும் எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு கல்வி வலயம் இரண்டில் கோப்பாய் கிறிஸ்துவக் கல்லூரியில் அமைந்துள்ள நிலையத்திற்கு சமுகம் தருமாறு யாழ்ப்பாணம் கல்வி வலயம் 2 கல்விப் பணிப்பாளர் திரு க. கந்தசாமி அவர்கள் அறிவிக்கின்றார். அன்றைய தினமே இரண்டாம் ஆண்டிற்கான விரிவுரைகள் ஆரம்பமாகுமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

# போலிஸ் அதிகாரத்தை வழங்குமாறு ஜனாதிபதியிடம் மா. சபை கோரிக்கை

(கொழும்பு)

அரசியல் அமைப்பு சட்டவிதிக்கு அமைய மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டிய பொலிஸ் அதிகாரத்தை உடனடியாக வர்த்தமானி மூலம் வெளியிடுமாறு ஜனாதிபதியிடம் கோரும் தீர்மானமொன்றை வட மத்திய மாகாண சபை நேற்று ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

நேற்று மாலை நடைபெற்ற வட மத்திய மாகாண சபை கூட்டத்தில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது அரசியல் அமைப்பின் 13-ம் திருத்தத்திற்கு அமைய வழங்கப்படவேண்டிய பொலிஸ் அதிகாரத்தை மாகாண சபைக்கு வழங்க வேண்டும் என்றும் இதனை வர்த்தமானி மூலம் ஜனாதிபதி வெளியிட வேண்டும் எனவும் அத் தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது.

# வவுனியாவில் ஆயுதகளைவு பொலிசார் நடவடிக்கை

வவுனியாவில் அரச கட்டுப்பாட்டில் நிர்வாகம் நடைபெறும் பகுதிகளில் அனுமதிப் பத்திரமின்றி வைத்திருக்கும் ஆயுதங்களை உடனடியாக ஒப்படைக்குமாறு வவுனியா பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் ஆயுதங்களை வைத்திருப்போரின் தொகை அண்மைக்காலத்தில் வவுனியாவில் அதிகரித்துள்ளதாகவும் இதனைத் தொடர்ந்து பல சட்டவிரோத நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளதாகவும் இதனால் இம்முடிவை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# 2500கோடி புனரமைப்புநிதி வெளிநாடுகளால் நிறுத்தம்

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் புனரமைப்பு தொடர்பாக வழங்கப்பட இருந்த இரண்டாயிரத்து ஐந்நூறு கோடி ரூபா வெளிநாட்டு உதவி நிறுத்தப்பட்டுள்ளதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கப் படையினருக்கும் இடையே ஏற்பட்ட யுத்தத்தினால் சென்ற நான்கு வருடமாக வடபகுதிக்கு மின்சாரம் அனுப்பப்படவில்லை என்றும் இதனால் அங்கு புனர்வாழ்வுத் திட்டங்களை மேற்கொள்ள முடியாது போனதாக அவர் தெரிவித்தார்.

இதனால் புனரமைப்புக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டு உதவிகளை பெற முடியாது போனதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# எமது கொள்கைகளை வெளியிட ஒரு தினசரி கூட இல்லையே

## ஐ. தே. கவினர் கவலை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையையும் கருத்துக்களையும் தெரிவிப்பதற்கான ஒரு தினசரி பத்திரிகை கூட தம் வசம் இல்லை என்றும் எனவே இந்த நிலை தொடர்ந்து நிலவினால் கட்சி மேலும் மக்களிடம் இருந்து அன்னியப்பட்டு விடும் எனவும் கட்சி வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

இதனால் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பெரும் பாதகம் ஏற்படும் என சுட்டிக் காட்டப்பட்டதையடுத்து இது குறித்து மேலதிக நடவடிக்கை எடுக்கவென ஆறுபேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது கடந்த இரண்டாம் திகதி ஜனாதிபதி மாளிகையில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றிலேயே இக் குழு நியமிக்கப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் கூறின.

# பெருமளவுமருத்துவநூல்கள் இங்கும் வெளிவர வேண்டும்

## அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்

(நமது நிருபர்)

''தமிழ்நாட்டைப்போன்று பெருமளவு மருத்துவ நூல்கள் யாழ்ப்பாணத்திலும் வெளிவரவேண்டும்'' இவ்வாறு டாக்டர் எஸ், பி ஆர். சீர்மாறன் எழுதிய சில நோய்களும் சில ஆலோசனைகளும் என்ற மருத்துவ நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு முதல் பிரதியை பெற்றுக்கொண்ட அரசியல் துறை பொறுப்பாளர் திரு சு. ப. தமிழ்ச்செல்வன் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இன்று எவ்வளவோ நெருக்கடிகளின் மத்தியில் இங்குள்ள மருத்துவர்கள் தமது சேவையை ஆற்றி வருகிறார்கள் இவர்களது சேவையை பாராட்டுகிறோம் தமிழ்நாட்டில் பெருமளவு மருத்துவ நூல்கள் வெளிவந்துள்ளன அதைப்போன்று இங்கும் மருத்துவ நூல்கள் வெளிவர வேண்டும். இதன் முதல் படியாக டாக்டர் சீர்மாறன் எழுதிய இந்த மருத்துவ நூல் வெளிவந்துள்ளது. மற்றவர்களும் எழுத வேண்டும். தொடர்ந்தும் இதுபோன்ற நூல்கள் வெளிவரவேண்டும். இதற்கு எம்மால் ஆன உதவிகளை நாம் வழங்குவோம் எனவும் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் எஸ். வி. பரமேஸ்வரன் அவர்களின் தலைமையில் நேற்று மாலை நடைபெற்ற இந் நூல்வெளியீட்டு விழாவில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க. குணரட்ணம் அவர்கள் நூலை வெளியிட்டு வைக்க தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் முதல் பிரதியை பெற்றுக்

## பரீட்சை

இரத்தினபுரி, கேகாலை, குருநாகல, குளியாப்பிட்டிய, சிலாபம், நிக்கரவெட்டியா, கண்டி, கம்பளை, மாத்தளை அநுராதபுரம், பொலனறுவ, பண்டாரவளை, பதுளை, மொனறாகல, திருகோணமலை, கல்முனை, மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில்

## வட்ட ரீதியாக

மன் கோயிலடியில் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கமும், சண்டிலிப்பாய் வட்டத்தில், ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோயிலடியில் மானிப்பாய்ப. நோ. கூ. சங்கமும், கோப்பாய் வட்டத்தில், நீர்வேலி கந்தசுவாமி கோவில் முன்றலில் உரும்பிராய் இந்துக்கல்லூரி, சைவத் தமிழ் வித்தியாசாலை, ஊரெழு கணேசா வித்தியாசாலை, ஊரெழு சீ.சீ, தமிழ்க்கலவன் பாடசாலை, மாதர் சங்கங்கள், உற்பத்திக் குழுக்கள் உரும்பிராய் ஊரெழு சச நிலையங்கள் என்பனவும், யாழ் நல்லூர் வட்

# தமிழரிடம் வசூலித்த பணம் சிங்களவருக்கு அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

மன்னார் பெரும் நிலப்பரப்பிற்கும் மன்னார்த் தீவிற்குமான போக்குவரத்தின் போது பெறப்படும் பயணக் கட்டணம் மன்னார்த் தீவில் வாழும் இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படுவதாகத் தகவல் தெரிவிக்கின்றது.

மன்னார் பெரும் நிலப்பரப்பைச் சேர்ந்த தமிழ்ப் பயணிகளே இந்தப் போக்குவரத்தில் ஈடுபடுகின்றனர் இவர்களிடமிருந்து விடத்தல் தீவு மன்னார்த்தீவுக்குமான படகுச் சேவைக் கட்டணமாக ஒருவருக்கு தலா நூற்றி ஐம்பது ரூபா வீதம் மன்னார் செயலகத்தினால் வசூல்செய்யப்படுகின்றது.

தினம் ஒன்றிற்கு சுமார் 15 படகுகள் பயணிகளை ஏற்றி இறக்கும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

மன்னார் செயலகத்தினால் பெறப்படும் பயணிகள் கட்டணம் 'இடம் பெயர்ந்தோர் நலன் புரிச் சங்கத்திற்கு' வழங்கப்படுகின்றது.

மன்னார்த் தீவினுள் முஸ்லிம், சிங்கள மக்களே அதிகளவில் அகதிகளாக உள்ளனர் தமிழ்க் கிராமங்களிலிருந்து வெளியேறிய இந்த அகதி மக்கள் அரசாங்கத்தின் ஏனைய பல சலுகைகளையும் பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 2015 - ல்

எதிர்காலச் சந்ததியினருக்கு போதிய உணவு, வீடமைப்பு, சுகாதார சேவைகள், கல்வி நிலமூலவளம், வேலைவாய்ப்பு என்பனவற்றுக்கான சந்

# அங்கீகாரம்

யா/ கைதடி நாவற்குழி அ. த. க. பாடசாலையில் 1995-ம் ஆண்டில் இருந்து ஆண்டு 9 வகுப்பு ஆரம்பிக்கப்பட உள்ளது கைதடி அ. த. க. பாடசாலை 01. 01 95 தொடக்கம் மீண்டும் இயங்க உள்ளது.

இவை தொடர்பான கல்வி அமைச்சின் அங்கீகாரம் யாழ் கல்வி வலயம் 1ற்கான கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரிய தம்பிக்கு கிடைத்துள்ளதாக யாழ் கல்விவலயம் 1 தெரிவித்துள்ளது. [17]

## கூரே

அண்மைக்காலமாக கட்சித் தலைமையின் போக்கு குறித்து பகிரங்கமாக கருத்து வெளியிட்டுவரும் முன்னாள் அமைச்சர்களான சிறிசேன கூரே மற்றும் ஏ. ஜே. ரண

# புலிகளின் குரல் வானொலி நான்காம் ஆண்டு நிறைவுப் போட்டிகள் பற்றிய அறிவித்தல்

''புலிகளின் குரல்'' வானொலி ஆரம்பித்து 1994-11-21 உடன் நான்காம் ஆண்டு நிறைவு பெறுவதையொட்டி பின்வரும் போட்டிகள் நடாத்தப்பட்டுப் பெறுமதிவாய்ந்த பரிசில்கள் வழங்கப்படுவதோடு, தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் ஒலிபரப்புக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

உங்களின் ஆக்கங்களை 31-10-1994க்குப் பிந்தாமல் ''புலிகளின் குரல்'', யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

1. வானொலி நாடகப் பிரதி

வானொலி நாடகப் பிரதி ஆகக்கூடியது 20 நிமிடங்களுக்குள் ஒலிபரப்பக் கூடியதாக அமைதல் வேண்டும். பிரதிகள் எழுத்துத் தாளில் 10 பக்கங்களுக்குக் குறையாமலும் 12 பக்கங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

2. சிறுகதை

சிறுகதைகள் இதற்கு முன் ஒலிபரப்பப்படாதன

சிறுகதைகள் இதற்கு முன் ஒலிபரப்பப்படாதனவாகவும் பிரசுரிக்கப்படாதனவாகவும் இருத்தல் வேண்டும். பக்கங்களுக்குக் குறையாமலும் 5 பக்கங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

### 3. கவிதை

கவிதைகள் மரபுக் கவிதைகளாகவோ அல்லது புதுக்கவிதைகளாகவோ இருக்கலாம். ஒலிபரப்பும் நேரம் 5 நிமிடங்களுக்குக் குறையாமலும் 10 நிமிடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்,

குறிப்பு:-

ஆக்கங்கள் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சுப் பொறித்து அனுப்பல் வேண்டும். ஆக்கங்கள் தமது சுயமுயற்சியில் எழுதப்பட்டதென்றும் இதற்குமுன் ஒலிபரப்பவோ அல்லது வேறெவ்வகையிலும் வெளிவரவில்லையெனவும் உறுதிப்படுத்தல் வேண்டும். படைப்பாளிகள் தங்கள் பெயர் முகவரிகளை ஆக்கங்களில் குறிப்பிடாமல் தனித்தாளில் எழுதி இணைத்து அனுப்பிவைக்கவும். ஆக்கங்கள் எமது போராட்டத்தை மையப்படுத்தியோ அல்லது முன்னெடுத்துச் செல்வதாகவோ அல்லது சமூகமேம்பாடு கருதியதாகவோ அமைதல் வேண்டும். விதிமுறைகளுக்கமையாமல் அனுப்பிவைக்கப்படும் ஆக்கங்கள் நிராகரிக்கப்படும்.

பொறுப்பாளர்,
புலிகளின் குரல்,
தமிழீழம்.

(சி-10338)

டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் பரீட்சை மதிப்பீட்டு நிலையங்கள் பரீட்சை ஆணையாளரால் அமைக்கப்பட உள்ளன,

இப் பரீட்சை மதிப்பீட்டு நிலையங்களில் விடைத்தாள் பரீட்சகர்களாக சேவை புரிய விரும்பும் ஆசிரியர்கள் பற்றிய விபரங்களை உடன் தமக்கு பூரணப்படுத்தி அனுப்புமாறு யாழ். கல்வி வலயம் 1ற்கான கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி சகல கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கும் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களைப் பணித்துள்ளார். இதுதொடர்பான விபரங்கள் 30-9-94 ற்கு முன்னர் பரீட்சை ஆணையாளரை சேரவேண்டியிருப்பதனால் இவ் விடயத்துக்கு முக்கியத்துவம் அளிக்குமாறு அவர் மேலும் கேட்டுள்ளார்.

மேலும் விடைத்தாள் பரீட்சகர்களாக சேவை புரிய விண்ணப்பிப்போர் தொகை குறைவாக இருப்பின் மேற்கூறிய நகரங்களில் மதிப்பீட்டு நிலையங்கள் உருவாக்கப்படமாட்டாது எனவும் பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார். (17)

மூ ச ச நிலையங்கள் என்பனவும், யாழ் நல்லூர் வட்டத்தில் நல்லூர் கந்தசாமி கோவிலடியில், யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேசத்தைச் சேர்ந்த சகல கூட்டுறவுச் சங்கங்களைச்சார்ந்த கூட்டுறவாளர்கள், பணியாளர்கள், அன்புமாறன் சனசமூக நிலையம் சுண்டிக்குளி வடக்கு ச. ச. நிலையம், ஸ்ரார் சனசமூக நிலையம் என்பனவும், தீவகக் கோட்டத்தில்; புங்குடுதீவு ப. நோ. கூ சங்கம் சிறிகணேசா ம.ம. வித்தியாலயம் புனிதஅந்தோனியார்கல்லூரி, மகளிர் கல்லூரி, சரம்பொன் ம ம. வித்தியாலயம், லவனிதா குடியிருப்பு ஆகியனவும் கலந்துகொள்ளும்,

வடமராட்சிக் கோட்டத்தில் பருத்தித்துறை வட்டத்தில் மந்திகை அம்மன் கோவிலடியிலும், கரவெட்டி வட்டத்தில் துன்னாலை, கலிகை கந்தன் ஆலயத்திலும் உடுப்பிட்டி வட்டத்தில் விநாயகர் ச.ச. நிலையத்திலும் உண்ணாவிரத நிகழ்வுகள் இடம்பெறும்.

தென்மராட்சிக் கோட்டத்தில் கைதடி வட்டத்தில் கைதடிச் சந்தியில் கைதடி மேற்கு உதயநகர் மக்கள், நவபுரம் ச ச நிலையம் என்பனவும், சாவகச்சேரி வட்டத்தில் மணங்கோணாப் பிள்ளையார் கோவிலடியில் மட்டுவில், நுணாவில், கல்வயல் நுணாவில் தேவகி குடியிருப்பு இராசவீதி கிராமம் என்பனவும் கொடிகாமம் வட்டத்தில், 190-ம் கட்டை, புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் கரம்பகம். அக்பர் சமுத்திரன் ச.ச நிலையங்கள், வர்த்தகர் சங்கம் என்பனவும், பளை வட்டத்தில் இரட்டைக்கேணி அம்மன் கோவிலடியில், சதாபுரம் மக்கள், பிரதேசசபை, அஞ்சல் அலுவலகம் என்பனவும் உண்ணாவிரத நிகழ்வுகளில் கலந்து கொள்ளும்.

ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் முதல் பிரதியை பெற்றுக்கொண்டார்

நல்லை ஆதீனம் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள் ஆசியுரை வழங்கினார் தொடர்ந்து நூல் வெளியீட்டுரைகள் இடம்பெற்றன. (சி)

## மாணவர்

படவுள்ளது. இதன் பின்னர் துணைவேந்தர் கொழும்பு செல்லும் வேளையில் உயர் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டு விபரமாக விளக்கவுள்ளார் என தெரிய வருகின்றது.

இதேவேளை யாழ் பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீடத்தினை நிறுவுவதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாக பல்கலைக் கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னாள் யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் அமரர் அ. துரைராசா அவர்கள் யாழ். பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீடத்தினை நிறுவுவதற்கான தன்னால் ஆன அர்ப்பணிப்புக்களை மேற்கொண்டிருந்தார்.

தற்போதைய யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் க. குணரத்தினமும் முயற்சி செய்து வருவதாக தெரிய வருகின்றது.

இதற்கிடையில் பதவி ஏற்றுள்ள புதிய அரசின் நிலைப்பாடு பொறியியல் பீடத்தினை யாழ். பல்கலைக் கழகத்தில் அமைத்துத் தருவதில் எவ்வாறு இருக்குமென்பது குறித்து தெரியவரவில்லை.

இது தொடர்பாக யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் புதிய அரசிற்கு பொறியியல் பீடத்தின் அவசியம் பற்றி விளக்கி இதற்கான நடவடிக்கையை மேற்கொள்வார் என தெரியவருகின்றது. (பா)

சுகாதார சேவைகள், கல்வி நிலமூலவளம், வேலைவாய்ப்பு என்பனவற்றுக்கான சந்தர்ப்பங்கள் அருகி விடக்கூடிய சூழ்நிலை உருவாகலாம் எனவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2015-ம் ஆண்டில் உலக சனத்தொகையை 727 கோடியாக வைத்திருக்கவும் இம் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## இடம்

கையில், அகதிகள் ஒவ்வொருவரது பிரச்சினையும் தனித்தனியாக ஆராயப்படும் எனவும், சுமுகமான சூழ்நிலை தோன்றும் வரை சொந்த இடங்களுக்கு அவர்கள் மீளத் திரும்பும் சாத்தியம் குறைவாக இருக்கிறது எனவும், இக் குழுவின் உறுப்பினர்கள் விரைவில் நலன்புரி நிலையங்களுக்கு விஜயம் செய்ய இருப்பதாகவும் தெரிவித்தார்.

அமைச்சர்களான சிறிசேன கூரே மற்றும் ஏ. ஜே. ரணசிங்க ஆகியோர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்கள் கட்சியிலிருந்து விலக்கப்படலாம் எனவும் கூறப்படுகிறது.

## தலைவர்

இதேவேளை பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவிற்கு தலைவர் பிரபாகரன் எழுதிய கடிதத்தில் பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு சாதகமான அம்சங்கள் பல காணப்படுவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது இவ்வாறு வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது இந்த கடிதத்தின் முக்கியத்துவம் கருதி அதன் உள்ளடக்கங்களை அரசு பகிரங்கப்படுத்தவில்லை என்று தகவல் துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க தெரிவித்ததாகவும் அது மேலும் கூறியது.

## மரண அறிவித்தல்

### திரு. பூ. வை. பொன்னுச்சாமி

[மிருதங்க வித்துவான்]

ஆவரங்காலை பிறப்பிடமாகக் கொண்டவரும், நீர்வேலியை வசிப்பிடமாகக் கொண்டவருமான திரு. பூ. வை. பொன்னுச்சாமி (மிருதங்க வித்துவான்) அவர்கள் 14-09-1994 அன்று காலமானார். இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், தெட்சணமூர்த்தி, நவநீதன், இந்திரன், சந்திரன், றஞ்சன், ஸ்ரீதரன், வவி வதனி, ரதி, றோகினி, வசந்தா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் 15-09-94 வியாழக்கிழமை முற்பகல் 11-00மணியளவில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல்;
நீர்வேலி தெற்கு. P. இந்திரன் (மகன்)

(9407)

யாழ். ஸ்ரீதரில் இன்று மட்டும்
தினசரி காலை 10.30, மாலை 6.00
WAY OF THE DRAGON
[கராட்டி]
நாளை முதல்
RAMBO III
(தாக்குதல் சித்திரம்)
தினசரி 10-30 4-00 6-00

தினசரி மாலை 4-00 மணிக்கு மட்டும்
CIRCUS
இதனுடன்
BIG BOSS படத்திலிருந்து புறூஸ்லீயின் குங்ஃபூ சண்டைக் காட்சிகளும், RAMBO படத்திலிருந்து சில்வெஸ்டர் ஸ்டலோனின் சாகசக் காட்சிகளும் காண்பிக்கப்படும்.
ஃ பாடசாலையூடாக மாணவர்கள் தொடர்புகொண்டால் காட்சிநேர கட்டண சலுகைகள் வழங்கப்படும்.
(சி-10230)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.